*Registered as a News paper in Sri Lanka*

விலை ரூபா: 8.00

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:– பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | கார்த்திகை 10 | வெள்ளிக்கிழமை (25.11.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 341

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
சீமெந்து

# சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்க புலிகளிற்கு ஜனாதிபதி பகிரங்க அழைப்பு

## அனைத்துக் கட்சிக்கூட்டத்திற்கும் ஏற்பாடு

(நமது நிருபர்)

அரசாங்கத்துடனான சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கு வருமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விடுதலைப்புலிகளிற்கு பகிரங்க அழைப்பு விடுத்துள்ளார். இது தொடர்பான தகவலை அமைச்சரவை பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற அமைச்சரவைத் தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர்கள் மாநாட்டிலேயே அவர் இதனைத்தெரிவித்துள்ளார். (12 ஆம் பக்கம் பார்க்க)




மாவீரர்களை நினைவு கூரும்முகமாக யாழ்.பல்கலைக் கழகத்தில் அமைக்கப்பட்டுள்ள நினைவுச்சின்னம்

## மாவீரர் நினைவுச்சின்னம் பல்கலையில் நேற்று திறப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேசிய மாவீரர்களை நினைகூரும் நினைவுச்சின்னம் யாழ்.பல்கலைக் கழகத்தில் திறந்துவைக்கப்பட்டது. யாழ். பல்கலைக்கழ மாணவர் ஒன்றியத்தினால் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிற்கு அருகாமையில் இத்தூபி அமைக்கப்பட்டுள்ளது.

நேற்று காலை 10 மணியளவில் நடைபெற்ற இந்நிகழ்விற்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் க.விஜயரூபன் தலைமை வகித்தார். யாழ்ப்பாண பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி இரா.சிவச்சந்திரன், வணிக பீடாதிபதி க.தேவராசா ,விவசாய பீடாதிபதி க.இராஜதுரை ,மருத்துவ பீடாதிபதி எஸ்.சிவபாலன் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தலைவர் க.ஆழ்வாப்பிள்ளை, பல்கலைக்கழ ஊழியர் சங்கத்தலைவர் க.தங்கராசா ஆகியோர்பொதுச்சுடரினை ஏற்றிவைத்தனர்.

தமிழீழ தேசியக்கொடியினை பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் செயலாளர் சிவகரன் ஏற்றிவைத்தார். நினைவுச் சின்னத்தை பல்கலைக் கழக துணைவேந்தர் மோகனதாஸ் திரை நீக்கம் செய்துவைத்தார்.

மாவீரரின் சகோதரரும் முன்னாள் பல்கலைக்கழக மாணவர் மன்றத்தலைவருமான க.செல்வக்குமார் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையைச் சேர்ந்த குகன் ஆகியோர் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ காலநிலை அவதானிப்பு நிலையம் நாளை மாலை கிளிநொச்சியில் திறந்துவைப்பு

(கிளிநொச்சி)

தமிழீழ காலநிலை அவதானிப்பு நிலையம் நாளை முதல் இயங்கவுள்ளது. கிளிநொச்சி பாரதிபுரத்தில் 7ஆம் அறிவியல் நகர் வீதியில் இவ் அவதானிப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

அவதானிப்பு நிலையத்தின் திறப்பு விழா நாளை சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு நடைபெறவுள்ளது. அகவணக்கம், பெயர்ப்பலகை திரைநீக்கம் ,கட்டடம் திறந்து வைத்தல், அலுவலக அறை திறந்து வைத்தல்,கட்டுப்பாட்டறை திறந்து வைத்தல், கணனி தொடங்கி வைத்தல், வரவேற்புரை, வாழ்த்துரை, சிறப்புரை ஆகியன நிகழ்வில் இடம்பெறவுள்ளன.

(ச)

## சமாதான செயலகத்திற்கு புதிய பணிப்பாளர் நியமனம்

(கொழும்பு)

அரசாங்க சமாதான செயலகத்தின் பணிப்பாளராக முன்னாள் பிரதிப்பணிப்பாளர் கலாநிதி ஜோன் குணரட்ண நியமிக்கப்பட்டுள்ளார்.

இது வரைகாலமும் பணிப்பாளராக இருந்த ஜயந்த தனபால தனது பதவியை கடந்த 10 ஆம் திகதி இராஜினாமா செய்திருந்தார். இவரின் வெற்றிடத்திற்கு ஜோன் குணரட்ண நியமனம் செய்யப்பட்டுள்ளார் என அமைச்சரவைப் பேச்சாளர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். எவ்வாறாயினும் ஜயந்த தனபாலவின் பதவிக்காலம் இம் மாதம் 30 ஆம் திகதியே முடிவடையவுள்ளது.

இதன்பின்னரே (12 ஆம் பக்கம் பார்க்க)

## மாவீரர் எழுச்சி நாள் நிகழ்வுகள் இன்று ஆரம்பம்

(கிளிநொச்சி)

தமிழீழ தேசிய மாவீரர் எழுச்சி நாளுக்கான நிகழ்வுகள் இன்று காலை 8 மணிக்கு தமிழீழ தேசியக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றன.

பொதுச்சுடர் ஏற்றல்,தேசியக்கொடியேற்றல் ,திருவுருவப்படத்திற்கான ஈகச்சுடர் ஏற்றல், மலர் வணக்கம், அகவணக்கம் ,உறுதி உரை எடுத்தல், நினைவுரைகள் என்ற ஒழுங்கில் எழுச்சி நாள் நிகழ்வுள் நடைபெறவுள்ளன.

மாவீரர் துயிலும் இல்லங்களில் இன்று காலை 8 மணிக்கு ஏற்றப்படும் தேசியக் கொடி நவம்பர் 27 ஆம் திகதி மாவீரர் நாள் நிகழ்வுகள் முடிவடைந்ததும் இறக்கப்படும்.

பொது நிறுவனங்கள் ,பாடசாலைகள் கல்வி நிறுவனங்கள் இன்று முதல் 27 ஆம் திகதி வரை ஒவ்வொருநாளும் பணி முடிந்த பின் பி.ப. 12 .1 மணிக்குப் பின் 6 மணிக்கு முன்பாக தேசியக்கொடி இறக்கப்படும். இதற்கான ஒழுங்குகள் அனைத்து இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மாவீரர் தினத்தை உணர்வெழுச்சியுடன் நடத்துவதற்கான முன்னோடி நடவடிக்கைகள் தமிழகம் எங்கும் இடம்பெற்று வருகின்றன. வர்த்தக நிலையங்கள், அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் அனைத்தும் சிவப்பு மஞ்சள் கொடிகளால் அலங்கரிக்கப்பட்டு காட்சி தருவதுடன் பிரதான வீதிகளிலிருந்து மாவீரர் துயிலும் இல்லம் வரையிலான பகுதிகளில் ஆங்காங்கே அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. (11 ஆம் பக்கம் பார்க்க)

## பாராளுமன்றம் இன்று கூடுகிறது

(கொழும்பு)

ஆறாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது. இக்கூட்டத்தொடரில் புதிய ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முற்பகல் 10.30 மணிக்கு தன்னுடைய கொள்கை விளக்க உரையை ஆற்றவுள்ளதாக பாராளுமன்ற செயலர் பிரியாணி விஜயசேகர தெரிவித்தார்.

ஜனாதிபதியின் உரையின் பின்னர் கூட்டத்தொடர் முடிவடையும்.இந்நிலையில் இன்று மாலை அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாத காலத்திற்கு நீடிப்பது தொடர்பான விவாதமும் நடைபெறவுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலுக்கு முன்னர் பாராளும்ன்றம் கடந்த 22 ஆம்திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது. அன்றைய தினம் கூட இருந்த பாராளுமன்றத்தை ஜனாதிபதி மகிந்த 25 ஆம் திகதிவரை ஒத்திவைத்தார்.

(ச–4)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2549999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்





யாழ். பல்கலைக்கழகத்தில் அமைக்கப்பட்ட மாவீரர் நினைவுச்சின்ன திரைநீக்க நிகழ்வுகளின்போது...

ஆனையிறவில் அமைக்கப்பட்ட





மாவீரர் நினைவாலயம்

ஆனையிறவில் அமைக்கப்பட்ட மாவீரர் நினைவுச்சின்ன திறப்புவிழா நிகழ்வின்போது...









## யாழ்.மாவட்டத்தில் புனரமைப்பில் ஈடுபடும்
# அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளில் ஒளிவு மறைவு அற்ற தன்மை பேணப்பட வேண்டும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் புனரமைப்பு மற்றும் மீளமைப்புப் பணிகளில் ஈடுபடும் அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளில் ஒளிவுமறைவு அற்ற தன்மை அவசியம் காணப்படவேண்டும்.

இத்தகைய நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் செயல்திட்டங்களில் கணிசமான அளவு வீதம் அவற்றின் நிர்வாகக் செலவீனங்களுக்கு ஒதுக்கிடப்படுவதாக யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கே.கணேஷ் விசனம் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட அரச செயலகத்தில் அண்மையில் நடைபெற்ற புனரமைப்பு செயல்திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்ட கூட்டத்திலேயே அரசாங்க அதிபர் இவ்விடயத்தைச் சுட்டிக்காட்டியிருந்தார் எனத் தெரிய வருகின்றது.

இது குறித்து மேலும் தெரிவிக்கபபட்டதாவது, அரச சார்பற்ற நிறுவனங்களின் புனரமைப்புச் செயல் திட்டங்களின் செலவீனங்களுக்கு ஒதுக்கப்படும் நிதியில் பாரபட்சம் காட்டப்படுவதாகவும், ஒளிவு மறைவு அற்ற தன்மை காணப்படவில்லை எனறும் மாவட்ட செயலகத்திற்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகவும் அரசாங்க அதிபர் சுட்டிக்காட்டியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (த-16)

## பிரதமரின் செயலாளராக மஹிந்த பந்துசேன

(கொழும்பு)

பிரதம மந்திரியின் செயலாளராக மஹிந்த பந்துசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

நிர்வாக சேவைத்துறையில் சிரேஷ்ட அதிகாரியாகவும், பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க அரச நிர்வாக, உள்நாட்டு அலுவல்கள் மற்றும் தோட்ட கைத்தொழில் அமைச்சராக இருந்தபோது அந்த அமைசசுக்களின் செயலாளராகவும் பந்துசேன கடமையாற்றியுள்ளார்.

1965 ஆம் ஆண்டு நிர்வாக சேவைத்துறையில் இணைந்து கொண்ட பந்துசேன உதவித் தேர்தல் ஆணையாளர், கலாசார உதவி ஆணையாளர், கல்வி அமைச்சின் சிரேஷ்ட செயலாளர் ஆகிய பதவிகளை வகித்தமையும் குறிப்பிடத்தக்கது. (ற-8)

# பொத்துவில் செங்காமத்தில் சிங்களவர் குடியேற முயற்சி

(பொத்துவில்)

பொத்துவிலை அடுத்துள்ள செங்காமம் பகுதியில் பெரும்பான்மை சிங்கள மக்கள் குடியேறுவதற்கு கடும் முயற்சி எடுத்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

1994களில் மீள் குடியேற்றத் திட்டம் நடைமுறையில் இருந்தவேளை பொதது வில் நகரில் இருந்து சில பெரும்பான்மை இன மக்கள் செங்காமம் பாதுகாப்பு முகாமருகே சில மாதங்கள் குடியேறி வாழ்ந்தனர். பின்னர் நிவாரண அட்டைகளைப் பெற்று மீண்டும் பொத்துவிலுக்கு திரும்பிவிட்டனர். தற்போது கடற்கோளினால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், மீண்டும் இவர்கள் செங்காமத்தில் குடியேற பிரதேச செயலாளருடாக முயற்சி எடுத்து வருவதாக முஸ்லிம் மக்கள் பொத்துவில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர். (ற)

# சந்திரசேகரனின் கோரிக்கையை நிராகரித்தாராம் ஜனாதிபதி

(கொழும்பு)

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பெ.சந்திரசேகரன் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து முக்கியமான பல விடயங்கள் குறித்து கலந்துரையாடியுள்ளார்.

அரசாங்கத்துடன் இணைந்து தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சுப் பதவியை வகிப்பதற்குத் தான் தயாராக இருப்பதாக சந்திரசேகரன் மஹிந்தவிடம் இச் சந்திப்பின்போது கூறினார். என்றும் ஆனால் மஹிந்த அப்பதவியினை வழங்க மறுத்துவிட்டதாகவும் அலரி மாளிகை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

ஜே.வி.பியினர் தெரிவித்த ஆலோசனைக்கமையவே மஹிந்த இத் தீர்மானத்தை எடுத்தார் எனக் கூறப்படுகின்றது. தேர்தல் காலத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை முற்று முழுதான இனவாதக் கட்சியாக சித்தரித்து அது தொடர்பில் பரப்புரைகளைச் செய்த இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் மலையக மக்கள் முன்னணி போன்ற கட்சிகளை ஆளும் கட்சிப் பக்கம் எடுக்கக்கூடாது என்று ஜே.வி.பி உறுதியாக தெரிவித்துள்ளமையே மஹிந்தவின் இந்த நிராகரிப்பிற்கான காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

# முத்தலிப் கொலை சந்தேக நபரிடம் கையடக்கத் தொலைபேசி ஆவணங்கள்

(கொழும்பு)

கொழும்பில் கடும் பாதுகாப்புடன் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருக்கும் முத்தலிப் கொலை வழக்கின் சந்தேக நபரிடமிருந்து கையடக்கத் தொலைபேசியும் இரகசிய ஆவணங்களும் சிறைச்சாலை அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டுள்ளன.

சிறைச்சாலை அதிகாரிகளுக்குக் கிடைத்த தகவலையடுத்து சுமார் 8 மணி நேரம் சிறையில் தேடுதல் நடத்தப்பட்டுள்ளது. சந்தேக நபர் தனது கையடக்கத் தொலைபேசியூடாக தகவல்களை அனுப்பிக் கொண்டிருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

சந்தேக நபரின் கூண்டில் நடத்திய சோதனையின் போது தொலைபேசியின் சிம்மையும், சார்ஜரையும் மேலும் சில ஆவணங்களையும் சிறைச்சாலை அதிகாரிகள கைப்பற்றியுள்ளனர். இந்தப் பொருட்கள் தனக்கு சொந்தமானவையே என்பதை சந்தேக நபர் ஏற்றுக்கொண்டுள்ளார். எனினும் அவை எவ்வாறு கிடைத்தது என்பது பற்றி இதுவரை அவர் தெரிவிக்கவில்லை.

கைப்பற்றப்பட்ட இரகசிய ஆவணங்கள் மேலதிக விசாரணைகளுக்காக இரகசியப் பிரிவு பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்த சந்தேக நபரிடம் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவரிடமிருந்து பல முக்கியத் தகவல்களைப் பெறமுடியும் என்று சிறைச்சாலை அதிகாரி டென்சில் பிரேமரத்ன தெரிவித்தார்.

இந்த சிறையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது பல சிம்கார்டகள், நீரைக் கொதிக்க வைக்கும் ஹீட்டர்கள் மற்றும் தொலைபேசி சார்ஜர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. (த)

# சூழல் பாதுகாப்பு நடவடிக்கை

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் உள்ள பிரதேச சபைகள், நகரசபைகள், மாநகரசபைகளில் சூழல் பாதுகாப்பு தொடர்பான நடவடிக்கைகளை இவ்வார காலப் பகுதியில் மேற்கொள்ளுமாறு பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளா சகல உள்ளூராட்சி மன்ற தலைவர்கள், செயலாளர்களுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும், திண்மக் கழிவு அகற்றலை சிறந்த முறையில் மேற்கொண்டு, பொலித்தீன் பிளாஸ்ரிக், இரும்புக் கழிவுகளை அகற்றுதல், கழிவுநீர் வாய்க்காலை துப்புரவு செய்தல், பாதையோர கழிவுகளை அகற்றல் பற்றைகளை வெட்டி சிரமதானம் செய்தல், வீடுகள், வீதியோரங்கள், பொதுஇடங்களில் மரநடுகை செய்து அவற்றைப் பாதுகாத்தல், கொடிய தொற்று நோய்களிலிருந்து பாதுகாத்தலும், நீர் தேங்கி நிற்கும் இடங்களில் திண்ம, திரவ வாயுக் கழிவுகள் உரிய முறையில் அகற்றல், பொதுமக்களிற்கு சூழல் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி அதிலே கூடிய கவனமெடுக்கச் செய்தல்.

மேறபடி விடயங்கள் திட்ட வரைபுகள் தயாரித்து செயற்படுத்துவது மிகவும் அவசியம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-252)

# சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டால் மஹிந்தலை ஆதரிப்பது குறித்து பரிசீலனை

## –முஸ்லிம் காங்கிரஸ்

(கொழும்பு)

இனப்பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான செயற்பாடுகளை மீண்டும் தொடங்கி அனைத்துத் தரப்பினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் பேச்சுவார்த்தைகள் தொடங்கப்பட்டால் மஹிந்த ராஜபக்ஷவை ஆதரிப்பது குறித்து பரிசீலிப்போம் என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செயலாளர் ரி.ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் ரி.ஹசன் அலி மேலும் கூறுகையில்,

கிழக்கிலிருக்கும் முஸ்லிம்கள் எங்களுடன் இருக்கிறார்கள் என்பதை தேர்தல் உறுதிப்படுத்தியுள்ளது.

புதிய ஜனாதிபதி சமாதான செயற்பாடுகளை மீண்டும் தொடங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் அந்த செயற்பாடுகள் நடைபெற வேண்டும்.

சமாதான நடவடிக்கைகள் உயிரூட்டப்படுமாயின் அதற்கு ஆதரவளிக்க முடியும் என்றார். (த)

# 2006இல் பாராளுமன்றம் கலைப்பு?

பாராளுமன்றத்தை அடுத்த ஆண்டு கலைக்க ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

புதிய பாராளுமன்றத் தேர்தலின் மூலம் தமக்கு பெரும்பான்மைப் பலத்தை பாராளுமன்றத்தில் உருவாக்கிக் கொள்ளும் நோக்கத்தில் மஹிந்த ராஜபக்ஷ இதைத் திட்டமிட்டு வருவதாகக சுதந்திரக்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

பாராளுமன்றத்தில் சுதந்திரக் கட்சியின் மக்கள் கூட்டமைப்புக்கு 66, ஜே.வி.பீக்கு 39, ஐக்கிய தேசியக் கட்சிக்கு 82, தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு 22, ஜாதிக ஹெல உறுமயவுக்கு 9, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசுக்கு 5 ஆசனங்கள் உள்ளன. (ற)

# சமுர்த்தி முத்திரைக்கான பொருட்களை உடனடியாக வழங்குமாறு அறிவுறுத்து

(காரைநகர்)

யாழ்.மாவட்டத்தில் வழங்கப்பட்ட சமுர்த்தி முத்திரைக்கான பொருட்களை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மாவட்டத்தின் சகல பிரதேச செயலகங்களையும் யாழ்.மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் மகேஸ்வரகுமார் சுற்று நிருபம் மூலம் கேட்டுள்ளார்.

அச்சுற்று நிருபத்தில் மேலும,

சமுர்த்தி ஆணையாளர் நாயகத்தினால ஜுலை மாதம் தொடக்கம் டிசம்பர் மாதம் வரையிலான வழங்கப்பட்ட சமுர்த்தி முத்திரைகளிற்கு பொருட்களை வழங்குமாறும், ஆயிரம் ரூபா, அறுநூறு ரூபா, முந்நூற்று ஐம்பது ரூபா, இருநூற்றைம்பது ரூபா முத்திரைகளில் ஆயிரம் ரூபாவிற்கான முத்திரையில் 400 ரூபாவுக்கு பொருட்களையும், 360 ரூபாவினை பணமாகவும், கட்டாய சேமிப்பாக 200 ரூபாவும் சமூக பாதுகாப்பிற்கு 30 ரூபாவும, வீட்டு லொத்தரிற்கு 10 ரூபாவும் வழங்க வேண்டும்.

அதேபோல், அறுநூறு ரூபா முத்திரைக்கு 250 ரூபாவுக்கு பொருட்களையும், 210 ரூபாவினை பணமாகவும், 100 ரூபாவினை கட்டாய சேமிப்பாகவும், சமூக பாதுகாபபிற்கு 30 ரூபாவினையும் வீட்டு லொத்தரிற்கு 10 ரூபாவும் வழங்க வேண்டும்..

அதேபோல் முந்நூற்றைம்பது ரூபா முத்திரைக்கு 340 ரூபாவுக்கு பொருட்களை யும் 10 ரூபாவினை வீட்டு லொத்தரிற்கும், இருநூற்றைம்பது ரூபா முத்திரைக்கு 240 ரூபாவிற்கு பொருட் களையும் 10 ரூபாவினை வீட்டு லொத்தரிற்கும் வழங்கவேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-246)

# அரசியலமைப்புச் சபைக்கு உறுப்பினர்களை நியமிக்குக

## ஆசிய மனித உரிமைகள் ஆணையகம் அறிவுறுத்து

(கொழும்பு)

அரசியலமைப்புச் சபைக்கு உறுப்பினர்களை நியமிக்குமாறு ஆசிய மனித வுரிமைகள் ஆணையகம் கோரியுள்ளது.

இந்தச் சபைக்கு உறுப்பினர்கள் நியமிக்கப்படாமையினால் நாட்டின் நிர்வாகத்தில் சிக்கல் நிலையேற்பட்டுள்ளமையை ஆணையகம் சுட்டிக்காட்டியுள்ளது.

2001ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த 17ஆவது திருத்தச் சட்டத்தின் கீழ ஜனாதிபதியினால் நேரடியாக தேர்தல் ஆணையகம் உட்பட்ட ஏனைய ஆணையகங்களுககு உறுப்பினர்களை நியமிக்க முடியாது.

எனினும் அரசியல் அமைப்புச் சபையின பரிந்துரையின் படியே ஜனாதிபதியால், ஆண்ணக்குழுவிற்கான உறுப்பினர்களை நியமிக்க முடியும் என்ற சட்டம் இயற்றப்பட்டுள்ளது.

எனவே உடனடியாக அரசியல் அமைப்பு சபைக்கான உறுப்பினர்களை நியமிப்பதன் மூலம் இந்தத் தடங்கலை நீக்கவேண்டுமென்று ஆசிய மனிதவுரிமைகள் ஆணையகம் கேட்டுள்ளது.

இந்த நிலையிலேயே தற்போதைய தேர்தல் ஆணையாளருக்கு ஓய்வை வழங்க முடியுமென்றும் அந்த ஆணையகம் குறிப்பிட்டுள்ளது. (த-9)

## அருள் ஒளி வெளிவந்துள்ளது

(தெல்லிப்பழை)

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் மாதாந்தம் வெளியிடும் ‘அருள் ஒளி’ கார்த்திகை மாத இதழ் வெளிவந்துள்ளது. (த-7)

# இன்று ஒரு தகவல்

## தொந்தி ஒரு தொல்லை

வாயில் கொழுப்பு இருந்தாலும் பரவாயில்லை சார். எப்படியாவது ஒரு வழியாக சமாளித்து விடலாம். ஆனால்... வயிற்றில் மட்டும் கொழுப்பு இருக்கக் கூடாது சார். அப்படி இருந்தால் அதை அலட்சியமாகவும் விட்டு விடக்கூடாது. சில பேர் சொல்வார்கள்."எனக்குத் தொந்தி கிடையாது சார்... வேண்டுமென்றால் என் வயிற்றை அழுத்திப் பாருங்கள் கல் மாதிரி இருக்கிறது''என்று.

வயிறு கல் மாதிரி இருந்தால் உள்ளே கொழுப்பு இல்லை என்று நினைத்துவிடக்கூடாது.வயிற்றுத் தசைக்கு அடியிலுள்ள கொழுப்பு,சில வாத்தியங்களில் உள்ள நரம்பு போல் இறுக்கமாக இருப்பதாக அர்த்தம். அதனால் தொட்டுப் பார்த்தால் கல் மாதிரித்தான் இருக்கும். இருந்தாலும் தொந்தி தொந்திதான்.

வயிற்றில் கொழுப்பு அதிகமாக இருப்பது சங்கடம் தான். அதனால் கொலஸ்ட்ரோல் அளவு அதிகமாகும். இதய நோய்கள், நீரிழிவு போன்ற நோய்கள் ஏற்படலாம். ஒருவர் ஒல்லியாக இருக்கலாம். உடல் எடை அதிகமில்லாமல் இருக்கலாம்...அப்படி இருந்தாலும் கூட அவரது உடலில் மற்ற பகுதியை விட வயிற்றில் கொழுப்பு அதிகமாக இருக்கும். நாம் தான் ஒல்லியாக இருக்கிறோமே... நமக்கு ஒன்றும் இல்லை என்று நினைக்கக்கூடாது.

சரி... நமது வயிறு இருக்கவேண்டிய அளவைவிட அதிகமாக இருக்கிறதா... இல்லையா? அதை எப்படிக் கண்டுபிடிப்பது அதற்கு சில வழிகள் உண்டு. முதலில் நீங்கள் நேராக நிமிர்ந்து நில்லுங்கள். உங்கள் பார்வையை மட்டும் கீழே தாழ்த்தி கால் விரலைக் கவனியுங்கள். விரல் உங்களுக்குத் தெரிகிறதா? அப்படியென்றால் உங்கள் வயிறு சாதாரணம் தான்.கால் விரல் உங்கள் கண்ணுக்குத் தெரியவில்லையா? அப்படியென்றால் உங்களுக்கு வயிறு பெரிது தான் சார்.

இன்னொரு வழி இருக்கிறது. ஒரு தரையில் படுத்துக் கொள்ளுங்கள்.ஒரு மீற்றர் நீளமுள்ள அளவுகோல் ஒன்றை எடுத்துக்கொள்ளுங்கள். கழுத்து எலும்பில் ஒரு பக்கத்தையும்... இடுப்பில் ஒரு பக்கத்தையும் வையுங்கள். அதன் நடுப் பகுதி வயிற்றில் முட்டி தராசு மாதிரி ஆடுகிறதா? அப்படியென்றால் உங்கள் வயிறு பிரச்சினைதான்.

மருத்துவ அறிவியல் ரீதியாக உங்களுக்குத் தொந்தி இருக்கிறதா, இல்லையாவென்று கண்டுபிடிப்பதற்கு ஒரு வழி இருக்கிறது. உங்கள் இடுப்பில் ஒரு அளவு எடுக்க வேண்டும். சுற்றளவு இடுப்பிற்குக் கீழே உள்ள அதிகபட்ச சுற்றளவையும் எடுக்க வேண்டும். அந்த அளவை இந்த அளவால் வகுக்க வேண்டும். இந்த விகிதம் ஆண்களுக்கு 0.95இற்கு மேலே போகக் கூடாது. பெண்களுக்கு 0.85இற்கு மேல் போகக் கூடாது. அப்படிப் போய்விட்டது என்றால் வயிறு பெருத்திருப்பதாக அர்த்தம்.

சரி... இந்தத் தொந்தியைக் குறைப்பதற்கு என்ன செய்யலாம்? பட்டினி கிடக்கலாமா? அது தேவையில்லை! ஆனால் கலோரியின் அளவைக் குறைக்க வேண்டும். அது எப்படி? கொழுப்பு ஆகாரத்தைக் குறைக்க வேண்டும். கார்போஹைதரேற்,புரோட்டின் போன்றவை ஒரு கிராமிற்கு சுமார் 4 கலோரி கொடுக்கும்.ஆனால் கொழுப்பு ஒரு கிராமுக்கு 9 கலோரி கொடுக்கும். அதனால் ஒரே அளவுள்ள ஆகாரங்களில் கூட கலோரி வித்தியாசம் உள்ளது. கலோரி அளவு குறைவாகக் கொடுக்கக் கூடிய ஆகாரம் சாப்பிடவேண்டும்.

தொந்தியைக் குறைப்பதற்கு கடுமையான உடற்பயிற்சி தேவையா? அதுவும் தேவை இல்லை. ஆகாரத்தில் கொழுப்பைக் குறைத்தாலே போதும்.மற்றைய ஆகாரம் சமிபாடடைய இலேசான உடற்பயிற்சியே போதும். வயிற்றைக் குறைப்பதாகச் சிலர் உட்கார்ந்து,உட்கார்ந்து எழுந்திருப்பார்கள். அதுவும் தேவையில்லையாம். அப்படியெல்லாம் செய்து உங்களைக் கஷ்டப்படுத்திக் கொள்ள வேண்டாம். வயிற்றைக் குறைக்க அது உதவுவதே இல்லை என்று அது சம்பந்தமான நிபுணர்கள் சொல்கின்றனர்.

இது தொடர்பாக 1984இல் ஒரு சோதனை செய்து பார்த்தார்களாம். ஒரு நாளைக்கு 185 முறை உட்கார்ந்து, உட்கார்ந்து எழுந்திருப்பது.இது போல் 27நாள் பயிற்சி செய்தார்கள். வயிற்றுக் கொழுப்பில் எந்த மாறுதலும் இல்லையாம். அதனால் உட்கார்ந்து எழுந்திருப்பது போன்ற வேலையெல்லாம் வேண்டாம். தொந்தியைக் குறைக்க முயற்சிப்பவர்கள் தோற்றத்தை அழகாக்குவது ஒரு புறமிருந்தாலும் ஆரோக்கியமான நீண்டவாழ்வுக்கும் அவர்கள் அத்திவாரம் போடுகின்றனர் என்றுதான் அர்த்தம்.

ஒருவர் வந்தார்...''சார் எனக்கு தொந்தி இருக்கிறதா இல்லையா என்று கண்டுபிடிப்பது சிரமமாக இருக்கிறது'' என்றார். "சரி...நான் கண்டுபிடிக்கிறேன்... இப்படித் தரையில் காலை நீட்டிப் படுங்கள்''என்றேன். படுத்தார். "இப்போது உங்கள் கண்ணைத் திருப்பி கால் கட்டை விரலைப் பாருங்கள்...கட்டை விரல் தெரிகிறதா?''என்று கேட்டேன்.

'தெரிகிறது சார்' என்றார்.''நீங்கள் தெரிகிறது என்று சொல்வதை நான் எப்படி நம்புவது?''என்றேன். "அதோ தெரியும் அந்தக் கட்டை விரல் நுனியில் ஒரு ஈ உட்கார்ந்திருக்கிறது பாருங்கள்'' என்றார். "அப்படியென்றால் நீங்கள் பார்ப்பது கட்டைவிரல் இல்லை சார். உங்கள் மூக்கு நுனி! அங்கே தான் ஈ உட்கார்ந்திருக்கிறது''என்றேன் நான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்கள் மற்றும் பிரதி அமைச்சர்களின் விபரங்கள்

### அமைச்சரவை அந்தஸ்து இல்லாத அமைச்சர்கள்

★பெருந்தோட்ட,கைத்தொழில்-மில்ரோய் பெர்ணாண்டோ
★இளைஞர் விவகார,விளையாட்டுத்துறை- ஜீவன் குமாரதுங்க
★சமுர்த்தி,வறுமை ஒழிப்பு-திருமதி பவித்திரா வன்னியாராய்ச்சி
★சுதேச மருத்துவத்துறை-திஸ்ஸ கரலியத்த
★கடற்றொழில்,நீரியல்வளத்துறை-பீலிக்ஸ் பெரேரா
★தோட்ட உட்கட்டமைப்பு,கால்நடை அபிவிருத்தி-சி.பி.ரத்நாயக்க
★தெங்கு அபிவிருத்தி-சாலிங்க திஸநாயக்க
★கலாசார,தேசிய உரிமைகள்-மஹிந்த யாப்பா அபயவர்த்தன
★பாராளுமன்ற அலுவல்கள்-விஷ்வ வர்ணபால
★கூட்டுறவு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி-அப்துல மஜீத்
★மீள்குடியமர்த்துகை-ரிஷாட் பதியுதீன்
★அனர்த்த நிவாரண சேவைகள்-அமீர் அலி
★உள்நாட்டு அலுவல்கள்-சந்திரசிறி ஜைவீர
★விவசாய அபிவிருத்தி-சமல் ராஜபக்ஷ
★கைத்தொழில் அபிவிருத்தி-குமார் வல்கம
★நெடுஞ்சாலை அபிவிருத்தி-டி.பி.எக்கநாயக்க
★வெளிநாட்டு தொழில் வாய்ப்பு ஊக்குவிப்பு-ரோகித அபய குணவர்த்தன
★நீர்ப்பாசனம்-அன்வர் இஸ்மாயில்
★கமநல சேவைகள்,கமத்தொழில்,சமூக அபிவிருத்தி-எஸ்.எம்.சந்திரசேன
★தாவரவியல்,விலங்கியல் பூங்கா அபிவிருத்தி-பந்துல பஸ்நாயக்க
★பிராந்திய அபிவிருத்தி-குணரத்ன வீரக்கோன்
★ஆற்றல் அபிவிருத்தி மற்றும் தொழில்-சிறீபதி சூரியாராய்ச்சி
★புகையிரத அபிவிருத்தி-மஹிந்த அமரவீர

### பிரதியமைச்சர்கள்

★கிராமிய பொருளாதார அபிவிருத்தி-மில்ரோய் பெர்னாண்டோ
★சமய அலுவல்கள்-திஸ்ஸ கரலியத்த
★விஞ்ஞானம் தொழில்நுட்பம்-சாலிந்த திஸாநாயக்க
★தொழில் முயற்சி அபிவிருத்தி,முதலீட்டு மேம்பாடு, சமூக சேவைகள்,சமுர்த்தி நலன்புரி-ஜகத் புஷ்குமார
★தகவல்,ஊடகத்துறை-சேகு இஸ்ஸதீன்
★மகாவலி,சிறுவர் மற்றும் மகளிர் விவகாரம்-ஏ.ஆர்.ஏ.ஜயதிஸ்ஸ
★மாகாணசபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள்-அப்துல் மஜீட்
★நீதிமன்ற,நீதிமன்ற மறுசீராக்கல்,அரசியல் யாப்பு அலுவல்கள் தேசிய ஒருங்கிணைப்பு-டிலான் பெரேரா
★பொது நிர்வாகம்-ரி.பீ.எக்கநாயக்க
★நாட்டைக்கட்டியெழுப்பல் மற்றும் அபிவிருத்தி-டி.எம்.தஸநாயக்க
★தொழில்துறை-மேர்வின் சில்வா
★சுற்றாடல் மற்றும் நீர்ப்பாசனம்-டயஸ் பண்டாரநாயக்க
★மின்சக்தி-மகிந்தானந்த அளுத்கமகே
★நகர அபிவிருத்தி நீர் விநியோகம்-மகிந்த அமரவீர
★சுகாதார நலன்புரி,போசாக்கு-ஜயரத்ன ஹேரத்
★நெடுஞ்சாலைகள்-தயாசிறி டி திசேரா
★துறைமுக,கப்பல் போக்குவரத்து-துமிந்த திஸாநாயக்க
★நிதி திட்டமிடல் மற்றும் உயர்கல்வி-ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய
★தபால் தொலைத்தொடர்புகள்-ரோகித அபேய குணவர்த்தன
★கிராமிய கைத்தொழில் மற்றும் சுயதொழில் அபிவிருத்தி-பிரேம்லால் ஜயசேகர
★வீடமைப்பு,கட்டட நிர்மாணத்துறை-குணரத்ன வீரக்கோன்
★போக்குவரத்து-லசந்த அலகியவன்ன
★நுகர்வோர் சேவை மற்றும் விவசாய சந்தைப்படுத்தல்-சிறிபால கம்லத்
★நிதித்திட்டமிடல்-ரோகண திஸாநாயக்க
★உல்லாசப்பயணத்துறை-அர்ஜுன ரணதுங்க
★திட்டமிடல் மற்றும் திட்ட அமுலாக்கல்-உசைன் பைலா
★கல்வி- நிர்மல கொத்தலாவல
★வர்த்தக நுகர்வோர் நடவடிக்கைகள்- எச்.ஆர்.மித்ரபால
★வெளிவிவகாரம்-விஜயதாஸ் ராஜபக்ஷ (ற-4,9)

### கோழி இறைச்சி தொடர்பில்

# பொதுமக்களுக்கான அறிவுறுத்தல்

(கொழும்பு)

உரிய தராதரங்களுக்கு அமைவான கோழி இறைச்சியை உணவாகக் கொள்ளுமாறு விலங்கு உற்பத்தி சுகாதாரத் திணைக்களம் பொது மக்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இந்த நடைமுறைகளை அனுசரிப்பதன் ஊடாக பறவைக் காய்ச்சலிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வழி ஏற்படும்.இதன்மூலம் உள்ளூர் கோழிப்பணைக் கைத்தொழில் துறைக்கு பாதிப்பு ஏற்படமாட்டாது என திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் டாக்டர் எஸ்.கே.ஆர்.அமரசேகர தெரிவித்துள்ளார்.

பறவைக்காய்ச்சல் வைரஸ் இலங்கைக்குள் பரவியிராத போதும் அதிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்கு பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருப்பதாக அமரசேகர அறிக்கை விடுத்துள்ளார்.

அதன்பிரகாரம்,அனைத்து நாடுகளிலிருந்தும் கோழி இறைச்சி,கோழி இறைச்சி சார்ந்த உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றை இறக்குமதி செய்வது தொடர்பான அனுமதிப் பத்திரங்களை விநியோகிப்பது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன்,புலம் பெயர் பறவைகள் நடமாடும் பிரதேசங்களில் அடிக்கடி ஆய்வுகள் நடாத்தப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (த-7)

# வடக்கு-கிழக்கு பிரிப்புக்கான வாக்கெடுப்பு ஒத்திவைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பிரிப்புக்கான சர்வஜன வாக்கெடுப்பை மேலும் ஒரு வருடத்திற்கு ஒத்திவைக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதுதொடர்பான வர்த்தமானி நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. 1987ஆம் ஆண்டு இந்திய-இலங்கை ஒப்பந்தத்தின் படி 13ஆவது சரத்தின் கீழ் வடக்கு-கிழக்கு இணைக்கப்பட வேண்டுமா அல்லது பிரிக்கப்பட வேண்டுமா? என்பது தொடர்பில் கிழக்கு மாகாண மக்களுக்காக இந்த வாக்கெடுப்பு நடத்தப்படவிருந்தது.எனினும்,அன்று முதல் 18வருடங்களாக ஒவ்வொரு நவம்பர் மாதம் 25ஆம் திகதியும் இந்த வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டு வருகின்றது.

இதன் அடிப்படையிலேயே நேற்றுமுன்தினமும் இந்த வாக்கெடுப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.(ஐ-9)

# மெல்பேர்னில் பொலிஸார் தீவிர தேடுதல் நடவடிக்கை

(கொழும்பு)

அவுஸ்திரேலிய மெல்பேர்னில் பொலிஸார் பாரிய தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொண்டுள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்புகளைக் கொண்டிருந்தவர்கள் பற்றிய விபரங்களின் அடிப்படையிலேயே இத்தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பவுல் கிழக்கில் அமைந்துள்ள தமிழ் இணைப்பு அலுவலகமும் தேடுதல் நடாத்தப்பட்ட இடங்களில் ஒன்றாகும்.

இத் தேடுதல் நடவடிக்கை குறித்து அவுஸ்திரேலியப் பொலிஸார் உரிய காரணங்களை அறிவிக்காதபோதும் நாட்டில் நடாத்தப்படும் என எதிர்பார்க்கப்படும் தாக்குதல்களைத் தடுக்கும் முகமாகவே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாக அந்நாட்டுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ற-4)

### தேர்தல் புறக்கணிப்பு தொடர்பில்

# புலிகள் மீது நடவடிக்கை எடுக்க ஐ.தே.க ஐரோப்பிய ஒன்றியத்திடம் வலியுறுத்தும்

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக தமிழீழ விடுதலைப் புலிகள் மீது நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று ஐரோப்பிய ஒன்றியத்தை ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தவுள்ளது.

இது தொடர்பிலான நடவடிக்கைகளை ஐக்கிய தேசியக்கட்சி மேற்கொண்டு வருவதாகக் கூறப்படுகிறது.

தமிழ் மக்களின் தேர்தல் புறக்கணிப்புக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்றும் விடுதலைப் புலிகள் தடுத்ததால் தான் இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் கூட தமிழர்கள் வாக்களிக்கவில்லை என்றும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் ஐக்கிய தேசியக் கட்சி முறைப்பாடு செய்ய முடிவு செய்துள்ளதாகவும் தெரியவருகிறது.

இதுதொடர்பில் சர்வதேச நாடுகள் தெரிவித்த கருத்துக்களையும் அக்கட்சி சுட்டிக்காட்டத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரியவருகிறது. (ற)

# தற்காலிக வீடுகள் வெள்ளத்தில் மூழ்கின

(மருதங்கேணி)

வடமராட்சிப் பகுதியில் தொடர்ந்து பெய்து வரும் கடும்மழை காரணமாக வடமராட்சி வடக்குக் கரையோரப் பகுதிகளில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கென அமைக்கப்பட்ட தற்காலிக வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

வடமராட்சி வடக்கு கரையோரப் பகுதிகளான சுப்பர்மடம்,வியாபாரிமூலை, திக்கம் ஆகிய பகுதிகளிலுள்ள தற்காலிக வீடுகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதால் மீனவர்கள் இடம்பெயர்ந்துள்ளதுடன் பெரும் சிரமங்களையும் எதிர்நோக்கியுள்ளனர். (த-35)

# தேர்தல் ஒன்று தீர்ப்புகள் இரண்டு

நடைபெற்று முடிந்துள்ள இலங்கை ஜனாதிபதித் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளில் ஐம்பது சதவீதத்துக்கும் சற்று அதிகமான வாக்குகளைப் பெற்று மஹிந்த ராஜபக்ஷ வெற்றியீட்டியுள்ளார். சிங்கள மக்கள் தாங்கள் வாக்களித்ததன் மூலம் ஒரு தீர்ப்பை வழங்கியுள்ளார்கள். அதேவேளை தமிழ் மக்கள் தங்களுடைய வாக்கு களை அளிப்பதற்கு ஒட்டு மொத்தமாக



மறுத்ததன் மூலம் தங்களுடைய தீர்ப்பை ஏகமனதாக வழங்கியிருக்கின்றார்கள்.

தமது வாக்குகளை அளித்து மஹிந்த ராஜபக்ஷவிற்கு வெற்றியை வழங்கியவாகள் தாங்கள் பேரினவாதிகள் என்றும், பேரினவாதத்திற்கும் அதன் செயறபாடுக ளுக்கும, ஆதரவானவர்கள் என்றும் தெரிவித்துள்ளார்கள். அது வாக்களித்த அவர்களுடைய தீர்ப்பு.

இந்தத் தேர்தலை புறக்கணித்து தமது வாக்குகளை அளிப்பதற்கு ஒட்டுமொத்தமாக மறுத்த தமிழ் மக்கள் தாங்கள் பேரினவாதத்திற்கு அடிபணிய மாட்டோம் என்று அறிவித்துள்ளார்கள். இது வாக்களிக்க மறுத்த தமிழ் மக்களின் தீர்ப்பு!

இதன் அடிப்படையில்தான் இலங்கைத் தீவின் எதிர்காலம் எழுதப்பட இருக்கின்றது. இது சொல்வது அரசியல ஆருடம் அல்ல. கடந்த கால வரலாறு கூட இதற்கேற்பவே பல கசப்பான உண்மைகளைச் சுட்டிக காட்டி நிற்கின்றது.

வரலாறு ஒரு விடயத்தைத் தெளிவாக சொல்கின்றது. பொதுவாக சிங்கள மக்கள பேரினவாதத்திற்கு சார்பாகவே இருந்து வந்துள்ளார்கள். அதனைத்தான் இந்தத் தேர்தலும் வெளிப்படுத்தி உறுதிசெய்துள்ளது. தங்களுடைய அரசியல்வாதிகளும, தலைவர்களும் மட்டுமல்ல, தாங்க ளும் பேரினவாதிகள் என்பதை சிங்கள மக்கள் இன்று மீண்டும் நிரூபித்துள்ளாாகள என்பது ஒரு கசப்பான உண்மையாகும்.

சிங்கள பௌத்த பேரினவாதச் சிந்தனையையும், செயற்பாடுகளையும் வெளிப்படையாக முதலில் முன்வைத்தவா முன்னைய பிரதமரான எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா ஆவார். அவருடைய செயற்பாடுகள் இலங்கைத் தீவு எதிர்காலத்தில் பிளவுபடுவதற்கு அடி கோலியது மட்டுமல்லாது, அவரையும் பலி வாங்கியது. சிங்கள பௌத்த பேரினவாதத தால் அவர் இறந்தார். பண்டாரநாயக் காவை சுட்டுக் கொன்றவர் ஒரு சிங்கள பௌத்த பிக்கு ஆவார்.

இந்தப் பேரினவாதச் சிந்தனைக ளும், செயற்பாடுகளும் தொடர்ந்து வந்த காரணத்தினால்த்தான் ஜனநாயக மரபு முறைகள் யாவும் மீறப்பட்டு அவை வெறும் கேலிக் கூத்தாகின. தமிழ் மக்கள் முன்னர் நம்பிய, நம்பியிருந்த இந்த ஜனநாயக மரபுகள் சிறிலங்காவின் யாப்பின் ஊடாகவும், அதன் சட்டங்கள் ஊடாகவும் அரச வன்முறைகள ஊடாகவும் மீறப்பட்டன. தமிழ் மக்களின் அடிப்படை உரிமைகள் மறுக்கப்பட்டு அவாகளது நாளாந்த வழ்வியலும் நாசமாக்கபபட்டது. ஜனநாயக ரீதியாக தமிழ் மக்கள மேற்கோண்ட போராட்டங்கள் யாவும் அரச வன்முறையூடாக நசுக்கப்பட்டு வந்ததன் காரணமாகத்தான் தமிழரின் விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாக கூர்மையடைந்தது. அதனடிப்படையில் தமிழர்கள பெற்ற வெற்றிகளும், வலிமையும்தான் இன்று தமிழாகள் தம்முடைய எதிாகாலம் குறித்து நம்பிக்கை கொள்ளக் கூடியதாக உள்ளது.

இன்று தமிழ் மக்கள் ஜனாதிபதித் தோதலில் அக்கறை காட்டாமல் அதனை ஒட்டு மொத்தமாகப் புறக்கணித்த காரணங்களில் நாம் மேற்கூறியவை களும் அடங்கும். தமிழ மக்கள் முந்தைய தேர்தல்களின் போது அளித்திட்ட ஆணையை சிங்கள தலைவர்கள் பரிசீலிக்க கூட முன்வரவில்லை. தமிழா தாயகம் என்ற கோட்பாட்டை வலியுறுத்தி தமிழ்மக்கள் ஜனநாயக முறையில் முன்னர் கொடுத்திட்ட இறையாணையை சிங்களத் தலைமை நிறைவேற்றவும் இல்லை. பரிசீலிக்கக்கூட முன்வரவில்லை.

ஆகவே தமிழ் மக்களுக்கு இயல் பாகவே சில ஐயங்கள் எழுந்திருப் பதில் வியப்பில்லை! எத்தனை தடவைகள் நாம் தேர்தல்களில் வாக்களிக்க வேண்டும். எமது கோரிக்கையையும் ஆணையையும் எத்தனை தடவைகள் நாம் திருப்பித்திருப்பி வழங்கிக் கொண்டிருக்க வேண்டும். இவையெல்லாம் ஏன் நிறைவேற்றப்படவில்லை இவையெல லாம் ஏன் ஏற்கப்படவில்லை. இவைதான் சிறிலங்காவின் ஜனநாயகம். தமிழ்த் தேசத்திற்கு தரக்கூடிய தீர்ப்பா? இதுதான் நியா யமா? இது நீதியாகுமா? இவைகள் தமிழ் மக்களின் நியாயமான சந்தேகங்களாகும்.

ஆகவே தமிழ் மக்களின் ஏகோபித்த ஆணையையும், வேட்கையையும் ஏற்றுக் கொள்ளாத, ஏன் செவிமடுக்கவும் மாட்டாத தேர்தல்களில் நாம் ஏன் தொடர்ந்தும் பங்கெடுக்க வேண்டும்? ஏன் பங்களிக்க வேண்டும்?. தமிழ் மக்களின் சுதந்திர வேட்கையின் இறையாணையை ஒருமித்த குரலாக வெளிப்படையாக நாம் தொிவிப்பதற்குரிய வாய்ப்பாக இந்த முந்தைய தேர்தல்கள் அமைந்ததை தவிர வேறு என்ன பலன்களோ, பயன்களோ நடைமுறையில் எமக்கு வழங்கப்பட்டுள்ளன.?

தமிழீழ மக்கள் தாங்கள் எழுப்பிய இந்த வினாக்களுக்கு தாங்களாகவே பதில் அளித்துள்ள விதம்தான் இந்தத் தேர்தல் புறக்கணிப்பு.

இதேவேளை நாம் இன்னுமொரு விடயத்தையும் கவனிக்கவேண்டும். தமிழீழ மக்கள் சிறிலங்காவின் அரசியல் பொய்மையில் இருந்து என்றோ தெளிவு பெற்றுவிட்டார்கள். ஆனால் சிங்கள மக்கள் இன்னும தெளிவு கொள்ளாதது மட்டுமல்ல, எதிர்காலத்திலும் தெளிவு கொள்வார்களா என்பதும் ஐயத்திற்கு உரியதாகவே உள்ளது.

சிங்கள பொதுமக்கள் பேரினவாத சிந்தனைக்கும், அதன் கொள்கைக்கும் ஆதரவாக தொடர்ந்து வாக்களித்தும், ஆதர வளித்தும் வந்துள்ளது போல் வேறு சில பொய்மைகளுக்குள்ளும் சிக்குண்டு போயுள்ளார்கள். சிங்கள அரசியல் தலைவர்கள் சிங்கள மக்களுடைய நாளாந்த வாழ்வியல் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்காகக் கொடுத்த வாக்குறுதிகளையும் நம்பி அவர்கள் ஏமாந்து போயுள்ளார்கள்.

சிறிமாவோ பண்டாரநாயக்கா சந்திர மண்டலத்தில் இருந்தாவது உங்களுக்கு அரிசி கொண்டு வந்து தருவேன என்று கூறியதை நம்பி வாக்களித்தவர்களும் இந்த சிங்கள மக்கள் தான்.

பின்னாளில் சந்திரிகா அம்மையார் நான்கு ருபாய்க்கு நான் பாண் வழங்குவேன் என்று கூறியதை நம்பி வாக்களித்தவர்களும் இந்த சிங்கள மக்கள் தான்.

நூற்றுக்கணக்கான உதாரணங்களை சுட்டிக்காட்ட முடியும் என்ற போதிலும் ஒரு பானை சோற்றுக்கு இரு சோறுகளை மட்டும் பதம் காட்டினோம்.

சிங்கள மக்களின் தோதல் வாக்களிப்பு முறையானது இன்னுமொரு உண்மையையும புலப்படுத்தி நிற்கின்றது. நடைமுறைச் சாத்தியம் இல்லாத வாக்குறுதிகளையும நம்பி இந்தச் சிங்கள மக்கள் வாக்களித் தாாகள் என்பதே அது.

சிங்கள மக்களது இந்த மனப்பான்மை உடனடியாகவே மாற வேண்டும். இல்லாவிட்டால் அது ஒரு மிகக் கசப்பான படிப்பினையை அவாகளுக்குக் கற்றுக் கொடுக்கப போகின்றது என்றே நாம் இந்த வேளையில கருதுகின்றோம். தாங்கள் அதாவது சிங்கள மக்கள் இதுவரை காலமும் தொிவு செய்த, செய்து வருகின்ற தமது சிங்கள தலைவர்கள் எந்த விதமான பிரச்சினைகளையும் என்றுமே தீர்க்கப் போவதில்லை என்பதை மிகக கசப்பான ஓா அனுபவம் ஊடாக இவாகள் உணரப் போகின்ற காலம் வெகுதூரமில்லை.

சிங்கள மக்கள் தங்களைச் சூழ்ந்திருக்கும் பொய்மையில் இருந்து விடுபட்டு வெளிவர வேண்டும. ஏனென்றால் இப்போது நடை பெறுகின்ற தேர்தல்கள் ஜனநாயகத்தை அடிப்படையாகக் கொண்டு நடைபெறு வதில்லை. அவை வெறும் கவாச்சிப் பொருட்களாகவே, போதைப் பொருட்களாகவே செயற்பட்டு வருகின்றன. [illegible]தல் வாக்குறுதிகளைத தமது த[illegible]வர்கள் நிறைவேறறியதேயில்லை என்ற நிதாசனத்தைச் சிங்கள மக்கள் என்று உணர்கின்றார்களோ அன்றுதான் அவாகளுக்கு விடிவெள்ளி தொியும்.

ந[illegible]ந்து முடிந்த தேர்தலின் முடிவுகள் குறித்தும் அதனுடைய பின்புலம் குறித்தும் இதுவரை தர்க்கித்து இருந்தோம். அத்துடன் மேலும்



சில முக்கிய விடயங்கள் குறித்துச் சில கருத்துக்களை இவ்வேளையில் முன்வைப்பதானது பொருத்தமானதாக இருக்ககூடும் என்றும் எண்ணுகின்றோம். நடந்து முடிந்துவிட்ட இந்த தேர்தல் மஹிந்த ராஜபகஷ அவர்களுக்கு சகல நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்டுள்ள ஜனாதிபதிப் பதவியை வழங்கியிருக்கின்றது.

இன்று இலங்கைத்தீவு எதிர்நோக்கியிருக்கின்ற தலையான பிரச்சனைகளை அவா எவ்வாறு கையாளப்போகின்றாா என்பது குறித்த ஊகங்களும், புலம்பல்களும் இப்பொழுதே கிளம்பிவிட்டன. சமாதான முன்னெடுப்புக்கள் குறித்தும், குறிப் பிட்ட சில வெளிநாடுகளின் தலையீடுகள (?) குறித்தும் ஏற்கனவே சிலர் தமது எதிர்பார்ப்புக்களை எழுதவும் தொடங்கி விட்டனர். தற்போது சகல நிறைவேற்று அதிகாரங்களையும் மஹிந்த ராஜபக்ஷ பெற்றுக் கொண்டுள்ளதால் அவருக்கு இனிமேல் ஜே.வி.பி போன்ற கடும் போக்காளர்களின ஆதரவு தேவை இருக்காது என்றும் அதனால மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் நலம் கருதி நல்ல செயற்பாடுகளை முன்னெடுக்கவும் கூடும் என்றும் சிலர் கருத்து வெளியிட்டுள்ளார்கள். புதிய ஜனாதிபதி ராஜபக்ஷவும் தீர்க்கமான தெளிவான அறிக்கைகளை வெளியிடாமல் வளவள, கொள கொள என்று பேசி வருகின்றார்.

புதிய ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் தலையான பிரச்சனைகளைச் சந்திப்பதற்காக எத்தகைய செயற்பாடுகளை மேற்கொள்ளப் போகின்றார் என்ற எதிர்பார்ப்பு எல்லோாிடமும் எழுந்திருக்கின்றது. எம்மைப் பொறுத்தவரையில் அவருக்கு யாரும் வழிகாட்டத் தேவையில்லை. காரணம் சிங்கள பௌத்த பேரினவாதச் சிந்தனைகளின் செயற்பாடுகளின் விளைவுகள் ஏற்கனவே ஒரு



பாடத்தையும் வழியையும் காட்டி நிற்கின்றன. அவற்றை அவர் அறிந்து அதற்கேற்றாப்போல் நடந்து கொண்டாலே போதுமானது. சிங்கள பௌத்த போினவாத சிந்தனைகளும், செயற்பாடுகளும் அவற்றை கடைப பிடித்தவர்களையே ஈற்றில் அழித்து விட்டிருப்பதை இன்று ஜனாதிபதி ராஜபக்ஷ முழங்குகின்ற 'பண்டாரநாயக்கா சகாப்தம்' என்பதானது முதலில் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கா வையும், நாட்டையும் எவ்வாறு அழிவுக்கு உள்ளாக்கியது என்பதனை இவர் முதல் உணர வேண்டும். அது ஒரு படிப்பினையாகும்! அந்தப் படிப்பினை போதாது என்றால் முன்னால் ஜனாதிபதி சந்திரிகா அம்மையார் தமிழ் மக்கள் மீது மேற்கொண்ட கொடிய போர் ஈற்றில் என்ன பயனைத் தந்தது என்பதையும் மஹிந்த ராஜபக்ஷ எண்ணிப் பாாக்க வேண்டும். சந்திரிகா அம்மையார்கூட ஒற்றை ஆட்சி முறையை தவிாத்து UNION ஆட்சி என்ற கருத்துருவாக்கத்தை முதலில வெளியிட்டிருந்தவர்தான்!

ஒற்றையாட்சி முறை என்பது களாதியாகச் சாத்தியமில்லை என்ற நிதர்சனத்தையும் மஹிந்த ராஜபக்ஷ உணர்ந்தாக வேண்டும்.

இவ்வாறு மஹிந்த ராஜபக்ஷவின் அறிவுக்கண்ணைத் திறப்பதற்கு ஆயிரம் படிபபினைகள் காத்திருக்கின்றன. அவற்றை அவர் பயன்படுத்திக் கொள்ளாவிட்டால் விளைவுகள் விபாதமாகி விடும். இப்போது தலையான பிரச்சினைகள் என்று கருதப்படுபவை பின்னர் 'தலைபோகின்ற பிரச்சினைகளாகவே' மாறிவிடும் என்பதில் ஐயமில்லை.

மஹிந்த ராஜபக்ஷவின் நிலைப்பாடுகளில் மாற்றம் இல்லாமல் போனாலும் அவருடைய எதிர்பாாப்பு ஒன்று நிறைவேறக் கூடிய வாய்ப்பு ஒன்று வரக்கூடும். தமிழீழத் தேசியத் தலைவரை நேரில் சந்திக்க விரும்பு கின்ற மஹிந்த ராஜபக்ஷவின் ஆசை நிறை வேற்றுவதற்கு வாய்ப்புகள் அதிகம் உண்டு. 'அண்டை நாட்டுச் சிறிலங்காவின் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தமிழீழத்திற்கு சினேக பூாவ விஜயம்' என்ற செய்தி தலைப்பின் கீழ் மஹிந்த ராஜபக்ஷவின் விருப்பம் விரைவில் நிறைவேறட்டும்.!

## இணையப்பார்வை

ஜனாதிபதித்தேர்தல் இப்போது முடிவடைந்து விட்டது. சரியான தீர்ப்பைத் தரப்போவது நவம்பர் பதினேழு அல்ல! நவம்பா இருபத்தியேழு வழங்கவிருக்கின்ற தீர்ப்பைத்தான் ஆவலோடு எதிர்பார்த்து நிற்கின்றாார்கள் மக்கள். தமிழீழத் தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் இந்த நவம்பர் 27 அன்று வழங்கவிருக்கின்ற மாவீரர் தின பேருரை தெளிவுகளைத தந்து தீர்க்கமான பாதையைச் சுட்டிக் காட்டும்.

தமிழர் தாயகம், தேசியம், தன்னாட்சி, சுயநிர்ணய உாிமை போன்ற கோட்பாடுகளைத் தேசியத்தலைவா தொடர்ந்தும் வலியுறுத்தியே வந்திருக்கின்றார். தமிழீழ தேசத்தின் நியாயமான போராட்டத்தை உலக நாடுகள் புாிந்து கொண்டு அதற்குரிய அரசியல் அழுத்தங்களைச் சிறிலஙகாவின் சிங்களத் தலைமைகளிடம் மேறகொள்ள வேண்டும் என்றும் வேண்டுகோள்களை விடுத்துவந்துள்ளாா. இன்று தமிழீழ மக்கள் பொங்கு தமிழாகவும், புலம் பெயாந்த தமிழீழ மக்கள், 'எழுக தமிழாகவும்' வீறுகொண்டு தேசியத் தலைமையின் பின்னே அணி திரண்டு நிற்கின்ற வேளையில், தமிழீழத் தேசியத்தலைவா வழங்கவிருக்கின்ற மாவீரர் தினப் பேருரையை அனைவரும் எதிாபார்த்து நிற்கின்றனர்.

# சிவம் ஒன்றே பூமியில் புகழ் தக்க பொருள்

யாதொரு தெய்வத்தைப் பெருளாகக் கொண்டு வழிட்டாலும் உமாதேவியாரைப் பாகங்



கொண்ட சிவபெருமானே அத் தெய்வமாகி அவ்விடத்தில் வெளிபட்டு நின்று வழிபாட்டின் பயனை வழக்கியருள்வார். சிவபெருமானைத் தவிர்ந்த ஏனைய தெய்வங்கள் துன்பப்படுவன. இறத்தலைச் செய்யும் பிறதத லைச் செய்வன. நல்வினைகளையும் தீவினைகளையும புரிவன.

மேற் சொல்லிய செயல்கள் எதுவும் இல்லாதவர் சிவபெருமான். சிவபெருமான் ஆன்ம கோடிகளுடைய இருவினைகளையும் அறிந்து அதற்குத் தக்கவாறு திருவருள் பாலிப்பார்.

அந்த உண்மையைச் சிவஞான சித்தியார் என்னும் சீரிய பனுவல் பின்வருமாறு தெளிவுபடுததும்.

**யாதொரு தெய்வங் கொணடி**
**ரத்தெய்வ மாகி யாங்கே**
**மாதொரு பாக னார்தாம்**
**வருவர்மற் றைத்தெய்வங்கள**
**வேதனைப் படுமிறக்கும்**
**பிறக்குமேல் வினையுஞ் செய்யும்**
**ஆதலா லிவையி லாதர**
**னறிந்தருள் செய்வனன்றே**
**(2-115)**

எவ்வுருவத்தில் எவர் ஒருவர் அன்பு செலுத்தினாலும் அவ்வுருவில் அவ்வவர்க்கு அருள்பாலிக்கும் கருணைக்கடல் சிவபரம் பொருளான கடவுள். இதனைக் 'கறபனைக் கடந்தசோதி கருணையே உருவமாகி' என்று இயம்பும் பெரிய புராணம்.

சிவபரம பொருள் ஒன்று. அப்பொருளுக்கு மேலானதான பொருள் யாண்டும இல்லை. ஆனால் அப் பராபரம் அனைத்திலும் நீக்கமற நிறைந்து நிற்கும் பரிபூரணம், அவ்வுண்மையை ஒன்று நீ அல்லை அன்றி ஒன்று இல்லை எனத் திருவாசகம் வியந்து ஓதும். உண்மை ஓர்ந்து உணர்தற்குரியது. "நின்னாவார் பிறரின்றி நீயே யானால்" என்று ஆறாம் திருமுறை அருளிச் செய்ய- தனக்கு உவமை இல்லாதன்- என்று மெய் பேசும் பொய்யா மொழி.

தனக்கு உவமை இல்லாதான் தாளில் அன்பு செலுத்துபவர்களுடைய மனமாகிய விளை

## வெள்ளிநற்சிந்தனை

நிலத்தில் சிவகதிவித்தாக முளைத்துப பயன் அளிக்கும் அழிவில்லாத பரம்பொருள். இந்த உண்மையின் விரிவை, 'மெய்ம்மையாம் உழவைச்செய்து' என்று தொடங்கும தேவாரத்தால் நன்கு அறியலாம். 'நினைப்பார்கள் மனத்துக் கோர் வித்துமானாய்' என்பதும் அதுவே. 'அன்பினில் விளைநத ஆரமுதே'என்பது திருவாசகம்.

சிவபிரானின் வள்ளல் திறனை பாடுமபோது, 'வேண்டுவார் வேண்டுவதே ஈவான்' என்றும் 'வேண்ட முழுதும் தருவோய் நீ 'என்று திருமுறைகள் அறையும்.

வேண்டியதைச் சிவம் தரவில்லை என்றால் அது அவரவா வினைக்குறையே ஆகும். சூரபன்மன் முருகப்பெருமான் கொண்ட பாரமேசுவர வடிவத்தைத் தரிசிதது உள்ளம் உருகினான். பின் சொன்னான் 'தடுத்தது மானம் ஒன்றே' என்று அதேபோல அவரவர் செய்த வினை வலிதானால் விரும்பியதை அடைவது யாஙஙனம். 'செய்தவினை இருக்கத் தெய்வத்தை நொந்தக் கால் எய்த வருமோ' என்ற ஆன்றோர் வாக்குச் சான்று.

அச் சிவபரம்பொருள் தேவர்தளையும் பிரம விட்டுனக்களையும் படைப்புத் தொடக்க நாளில் படைத்தது. வேதாகமங்களைத் தந்தது. முத்தொழில் நடாத்தும்.

பசுக்கள் மீதுகொண்ட பரிவினால் பஞ்ச கிருத்தியம் பயிலும் காரணங்களுக்கு எல்லாம் காரணமாக உள்ளது. ஒருவரிடத்தில் பிறவாதவர் அருவம், உருவம்,அருவுருவமாகும். பரிபூரணர். எல்லார்க்கும் ஈசன்.

சேதனப் பிரபஞ்ச முடிவிற்கும் அசேதனப் பிரபஞ்ச முடிவிற்கும் முடிவானவர். பண்டும் இன்றும் என்றும் உள்ள பொருள் மலரடிகளைப் பற்றினோடு பற்றினவர்க்கல்லால் உணரமுடியாத பழம்பொருள் -இத்தகையதான அருங்குணங்களால் பூமி மேல் புகழ்தக்க பொருள் சிவபரம்

**சிவ சண்முகவடிவேல்**

பொருள் ஒன்றே அதனால-

'பேசாத நாளெல்லாம் பிறவா நாளே, புகழ்ந்து பாடி கதரு நில்லே, அலறாறில்லே, பொய்ம்மையாளரைப் பாடாதே, புகழ்நாமம் செவி கேட்ப, வாயே வாழ்த்து' என்றும் மேலும் உரைத்துத் திருமுறைகள் உணர்த்துவன. □

# காணாமல் போன படகு கண்டுபிடிக்கப்பட்டது

(கொழும்பு)

கடந்த 21ஆம் திகதி தென் கடற்பரப்பில் காணாமல் போன மீன்பிடிப்படகு கடற்படையினரால் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நண்பகல் கரையிலிருந்து 5 கிலோமீற்றர் தூரத்தில் வைத்து இந்தப்படகு கண்டுபிடிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் படகில் இருந்த 5 மீனவர்களும் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

கடந்த 21ஆம் திகதி தெய்வேந்திர முனையிலிருந்து இந்த மீனவப் படகு பயணத்தை ஆரம்பித்து தொழில்நுட்பக் கோளாறு காரணமாகக் காணாமல் போனமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

# பனிப்பாறைகளின் உருகும் வேகம் அதிகரிப்பு
# 100 ஆண்டுகளில் உலகின் சில பகுதிகள் மூழ்கும்!

## விஞ்ஞானிகள் அபாய அறிவிப்பு

இன்னும் 100 ஆண்டுகளில் கடல்நீர் மட்டம் 1 மீற்றரால் உயர்ந்துவிடும். இதனால் உலகின் பல பகுதிகள் கடலில் மூழ்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

மாறிவரும் தட்பவெப்ப நிலைகள், இயற்கைமாற்றங்கள், விஞ்ஞான வளர்ச்சிக்கு இடையே உலகின வெப்பம் அதிகரிப்புக் காரணமாக வட துருவத்தில் உள்ள பனிப்பாறைகள் கொஞ்சம் கொஞ்சமாக உருகிவருகின்றன.

வடதுருவத்தில் வெப்பம் அதிகமாவதால் அங்கு பனிப்பாறைகள் இப்போது வேகமாக உருகி வருகின்றன. இதனால் கடல் மட்டம் அதிகரித்து வருகிறது. இதுபற்றி ஆய்வு நடததிய விஞ்ஞானிகள் அபாய அறிவிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளனர்.

இதன்படி இன்னும் 100 ஆண்டுகளில் கடல் நீர்மட்டம் 1மீற்றர் உயர்ந்துவிடும். இந்த மாற்றம் உலகின் பல பகுதிகளில் பாதிப்புகளை ஏறபடுத்தும்.

புயல், பலத்த மழை போன்றவை அடிக்கடி ஏற்பட்டு பேரழிவுகள் ஏற்படும். கடல் நீர் மட்டம் உயர்ந்து பல பகுதிகளை மூழ்கடித்து விடும்.

இந்த அபாயத்தை விஞ்ஞான ரீதியில் தடுக்க நடவடிக்கை எடுத்தாலும்கூட அதற்கு 1000 ஆண்டுகள் பிடிக்கும் என்றும் அவ் விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர். (ந)

# இராசிபலன்

25.11.2005
(கார்த்திகை 10, வெள்ளிக்கிழமை)
நவமி பிற்பகல் 6.16 மணிவரை
பூரம் பிற்பகல் 5.17 மணிவரை
இராகுகாலம் 10.42-12.12 மணிவரை
சுபநேரம் 6.12-7.42 மணிவரை

| | |
|---|---|
| மேடம் | பெரியோர் வெறுப்பு, வியாபார சிந்தை, காரிய தாமதம், மனச் சோர்வு. |
| இடபம் | வீண்பயம், எடுத்த காரியம் தாமதமாகும், ரோக நிலை, கல்வியில் ஆர்வம். |
| மிதுனம் | காரிய அனுகூலம், தெய்வ சிந்தை, பிறர் உதவி, பிரயாணம். |
| கடகம் | கடின வார்த்தை, உறவினர் வெறுப்பு, எடுத்த காரியம் தாமதமாகும், பணவிரயம். |
| சிங்கம் | தெய்வ சிந்தை, நல்ல முயற்சி, போசன சுகம், தெளிந்த சிந்தை. |
| கன்னி | உறவினர் மனஸ்தாபம், காரிய தாமதம், திடீர் நன்மை, தெய்வ தரிசனம். |
| துலாம் | தெய்வ சிந்தை, நல்ல வரவேற்பு, காரிய சித்தி, தந்தை வழியுறவு. |
| விருச்சிகம் | நல்ல முயற்சி, தெய்வ சிந்தை, சுப செலவு, போசன சுகம். |
| தனுசு | பிதாசிந்தை, பிரயாணம், ரோகநிலை, அமைதிக்குறைவு. |
| மகரம் | வீண்பிரச்சினை, முயற்சி தடங்கல், திடீர் நன்மை, தெய்வ சிந்தை. |
| கும்பம் | குடும்ப மகிழ்ச்சி, நிலை மாற்றம், பிரயாண நன்மை, தெய்வ தரிசனம். |
| மீனம் | பெரியோர் சந்திப்பு, உற்சாகம், சுப செய்தி, விருந்துபசாரம். |

**பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.**
- வளவன்

# ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் பிரிவுக்கான ஒருங்கிணைபபுக்குழுக் கூட்டம எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு மகா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

வடமராட்சிப் பிரதேச செயலர் ஆர்.வரதீஸ்வரன தலைமையில் நடைபெறவுள்ள இவ் ஒருங்கிணைப்புக கூட்டததிற்கு சகல உளளூர் திணைக்களத் தலைவர்களையும் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ந-35)

# செயலமர்வு

தென்மராட்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட 6 பாடசாலைகளில் பிள்ளைநேயப் பாடசாலை செயற திட்ட ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்றும் எதிர் வரும் திங்கட்கிழமையும் 8.30மணி முதல் 4.30 மணிவரை நடைபெறவுள்ளது.

இச் செயலமர்வு கைதடி முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம்,சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி,மீசாலை,வீரசிங்கம் மகாவித்தியாலயம், கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயம், வரணி ஆசிரியர் வள நிலையம் என்பனவற்றில் இடம் பெறவுள்ளது. அந்தந்தப் பாடசாலைக்குரிய ஆசிரியர்களை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார். (ந-108)

# காட்டுக்குள் வாழும் அதிசய சிறுவன்

காட்டுககுள் 6 மாதமாக சோறு தணணீர் இன்றி அதிசய சிறுவன ஒருவன் வாழ்ந்துவரும் அதிசயம் நேபாளத்தில் இடம்பெற்றுள்ளது.

நேபாளத் தலைநகர் காதமண்டுவைச சேர்ந்த சிறுவன் ராம்பகதூர் பஞ்ஜான். இந்தச் சிறுவனுக்கு 15 வயது ஆகிறது. இந்தச் சிறுவன் காதமண்டு அருகே உள்ள பாரா பகுதிக்கு சென்றான். அங்குள்ள காட்டுப்பகுதியில் ஒரு மரத்துக்கு கீழே உட்கார்ந்தபடி அவன் தவம் இருக்கத் தொடங்கினான்.

கால்களை மடக்கி அமர்ந்து கண்களை மூடி அவன் 6 மாதமாக இச் சிறுவன் தவம் இருக்கின்றான. இந்த 6 மாதமும் அவன் சோறு தண்ணீர் எதுவும் சாப்பிடவில்லை. எப்போதாவது ஒரு சில நிமிடங்கள் மட்டும் கண்விழித்துப் பார்க்கிறான்.

இதுபற்றி கேள்விப்பட்டதும் ஏராளமானவர்கள் அந்தப் பகுதிக்குச் சென்று பார்வையிட்டு வருகின்றனர். அந்தச் சிறுவன் புத்தரின் மறு அவதாரம் என்றும் நேபாள மக்கள் கூறுகிறார்கள். தவம் இருக்கும் அந்தச் சிறுவனைப் புத்தரின் மறு அவதாரமாக நினைத்து வழிபாடும் நடத்துகி றார்கள். பக்தாகள் கொடுக்கும் காணிக்கை எதையும் அவன் ஏற்றுக்கொள்வதில்லை.

தினமும் 10 ஆயிரம் பேர் வரை அந்தச் சிறுவனைப பார்க்கச் செல்வதால் இந்தக் காட்டுப்பகுதிக்கு செல்லும் சாலையில் போக்குவரத்து நெருக்கடியும் ஏற்பட்டுளளது. (ந)

# கூடைப்பந்து சுற்றுப்போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்.ஹற்றன் நஷனல் வங்கிப் பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் நடத்தும் கூடைப்பந்துச் சுற்றுப்போட்டி இன்றும் நாளையும் கொக்குவில் இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை பி.ப 3.15ற்கு ஆரம்பமகாவுள்ள ஆணகளுக்கான முதல் போட்டியில் யாழ். மத்திய கல்லூரியும்,சென். ஜோன்ஸ் கல்லூரியின் கறுப்பு அணியும் மோதவுள்ளன.

தொடர்ந்து இன்று பி.ப 4.15ற்கு ஆரம்பமாகவுள்ள அடுத்த போட்டியில் யாழ்.இந்துக் கல்லூரியும், சென்.ஜோன்ஸ் கல்லூரியின் சிவப்பு அணியும் மோதவுள்ளன.

மேற்படி போட்டிகளில் வெற்றியீட்டும் அணிகளுக்கிடையிலான இறுதிப்போட்டி நாளை காலை 7.30 மணிக்கு இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)


## வலி கிழக்கு பிரதேசசபை நீர்வேலி

## கேள்வி அறிவித்தல் - கால நீடிப்பு

**கடந்த 04.11.2005ஆம் திகதிய சந்தைகள் , இறைச்சிக் கடைகள குத்தகைக்கு வழங்குதல் சார்பான கேள்வி அறிவித்தல் விளம்பரம் பின்வருமாறு காலநீடிப்பு வழங்கப்படுகின்றது.**

**கேள்விப்பத்திரம் வழங்கும் திகதி -28.11.2005 வரை**
**கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்**
**திகதி-29.11.2005 நன்பகல்12மணிவரை**
**கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி**
**-29-11-2005 பிற்பகல் 2.00மணி**

வலி கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம்.
நீர்வேலி.
21.11.2005

த.நடராசா,
செயலாளர்.

(C/1839)

# இவரைத் தெரியுமா? பரிசுப்போட்டி இல. 75

## படத்தில் இருப்பவர் யார் தெரியுமா?



மழையால் மக்களின் மனங்களை ஈர்த்திருக்கும் நாயகியான இவர், 'ஸ்ரார்' நடிகருடன் ஜோடி சேர்ந்திருக்கிறார். இவரை உங்களுக்குத் தெரிந்தால் உங்கள் விடைகளை எழுதி எதிர்வரும் 01 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.

நீங்கள அனுப்ப வேண்டிய முகவரி:-

**இவரைத் தெரியுமா?**
**போட்டி இல:- 75**
**வலம்புரி – சங்குநாதம்**
**இல-03, 02ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

குறிப்பு:-

சரியான விடை எழுதுபவர்களில் மூன்று போட்டியாளர்களுக்கு குலுக்கல் முறைமூலம் தெரிவுசெய்யப்பட்டு பரிசு வழங்கப்படும்.

பரிசுபெறும் அதிஷ்டசாலிகள் தமக்கான பரிசுப்பணத்தினை 'வலம்புரி' காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 75

படத்தில் உள்ளவரின் பெயர் :-........................

அனுப்புபவரின் முழுப்பெயர் :-........................

அனுப்புபவரின் முகவரி :-........................
........................
........................

### இவரைத் தெரியுமா? பரிசுப் போட்டி இல:- 73
சரியான விடை





நடிகர் கார்த்திக்

இவரைத் தெரியுமா பரிசுப்போடடி இல. 73இல் பங்குபற்றிப் பரிசுபெறும் அதிஷ்டசாலிகளின் பெயர் விபரம்

முதற் பரிசு :- N.நிகாயினி
அராலி மத்தி,
வட்டுக்கோட்டை.

இரண்டாம் பரிசு :- வி.தர்சினி
அம்பலவாணர் வீதி,
புங்குடுதீவு.

மூன்றாம் பரிசு :- த.அரவிந்தன்
M.S.லேன்
கோண்டாவில்.

**சரியான விடை எழுதிப் பாராட்டுப் பெறுவோர் பெயர் விபரம்:**

ம.மைதிலி, கோண்டாவில். க.பிரதாப், நீர்வேலி. கே.அரசேஸ்வரன், நல்லூர். செ.செந்றோஜி,சுன்னாகம். திருமதி.செ.பாக்கியநாதன், வட்டுக்கோட்டை. சி.சங்கீதா,சம்பூரணி, வட்டுக்கோட்டை. தி.கனகசபாபதி, தம்பசிட்டி.

# முடி உதிரக் காரணம்



இன்றைய இளைஞர்களின் தலையாய பிரச்சினையாகத் தலைமுடிப் பிரச்சினை இருந்து வருகிறது. சிலருக்கு சின்ன வயதிலேயே முடி உதிர்ந்து வழுக்கை ஏற்பட்டு விடுகிறது.

இதற்குக் காரணம் ஒரு ஜீன் தான் என்பது தெரியவந்துள்ளது. எப்.ஜி.எப் – 5 என்ற ஜீனுக்கும், முடி வளர்ச்சிக்கும் தொடர்பிருப்பது இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

கலிபோர்னியா பல்கலைக்கழகத்தில் எலிகளை வைத்து சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்தச் சோதனையின் போது வழக்கத்திற்கு மாறாக ஒரு எலிக்கு மட்டும் நீண்ட முடி வளர்ந்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இதற்குக் காரணம் பைப்ரோ பிளாஸ் வளர்ச்சிக் காரணி என்பது தெரியவந்துள்ளது. சாதாரண எலிகளின் மயிர்க்குழியில் இந்த ஜீன் தேங்கி முடி வளர்ச்சியைப் பாதிக்கிறது. மியூட்ன்ட் எலிகளில் இந்த ஜீன் இல்லாததால் முடி வளர்ச்சி தடையின்றி வளர்கிறது என்று அந்தச் சோதனையில் கண்ட றியப்பட்டுள்ளது.

# ஊதியம் மட்டும்தான் முக்கியமா?

வேலையைத் தேடும் போது ஊதியத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியம். ஆனால் ஊதியம் மட்டுமே முக்கியம் என்று இருந்துவிட முடியாது.

முதல் வேலையைத் தேடுபவராக இருந்தாலும், வேறு வேலைக்கு மாறுபவராக இருந்தாலும், வேலை கிடைப்பது சிரமமாக இருந்தாலும் பலர் இன்று ஊதியம் மட்டுமே முக்கியமில்லை என்று கருதுகின்றனர்.

சமீபத்தில் வெளிநாடொன்றில் நடத்திய ஒரு ஆய்வில்,

'வேலையில் நீங்கள் எதிர்பார்ப்பது என்ன?' என்ற கேள்வி புதிய பட்டதாரிகளிடம் கேட்கப்பட்டது. இதில் முக்கிய எதிர்பார்ப்பாக இடம்பெற்றது பதவி உயர்வு மற்றும் திறமையை மேலும் வளர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் தான்! இதற்குப் பிறகு தான் ஊதியம் இடம்பெற்றது! ஆர்வத்துடனும் மகிழ்ச்சியுடனும் நாங்கள் வேலை செய்ய விரும்புவதே இதற்குக் காரணம் என்றனர் இளைய தலைமுறையினர்.


பொருளாதாரத்தின் அடிப்படையில் ஊதியத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பவர்களும் பதவி உயர்வு, நிறுவனத்தின் கொள்கைகள், சக ஊழியர்கள் என்று பல விஷயங்களை எண்ணிப் பார்க்கின்றனர். இதுவே வேறு வேலையைத் தேட முக்கிய காரணமாக அமைகிறது. ஊதியம் மட்டுமே முக்கியம் என்று நினைக்கும் நிறுவனங்கள் வேறு விஷயங்களைக் கவனிக்கத் தவறி விடுகின்றன. இதனால் நல்ல ஊழியர்களை இழக்கின்றன.

ஊதியத்திற்கு முக்கியத்துவம் கொடுக்கவில்லை என்பதால் குறைவான ஊதியத்திற்கு வேலை செய்ய வேண்டும் என்றில்லை. ஊதியம் நம் ஆற்றலுக்கு கொடுக்கப்படும் சன்மானம். அது குறைவாக இருந்தால் நம் மகிழ்ச்சியை பாதிக்கும். செய்யும் வேலையில் ஆர்வமும் குறையும் மற்றும் அன்றாடச் செலவுகளைச் சமாளிப்பது சிரமமாகிவிடும்.

ஊதியத்தால் மட்டுமே பணம் கிடைக்கும் என்ற நினைப்பு தவறு என்று பல வேலை வாய்ப்பு நிறுவனங்கள் கூறுகின்றன. போக்குவரத்து செலவு, மருத்துவ செலவு, மேல் படிப்பிற்கான செலவு, வீட்டிலிருந்தே வேலை பார்க்கும் வசதி, விடுமுறையில் சுற்றுலா செல்லும் செலவு, ஓய்வு ஊதியம் ஆகிய பல்வேறு செலவுகளை நிறுவனங்கள் ஏற்கின்றன. இது நம் செலவுகளைக் குறைத்து சேமிப்பை அதிகரிக்கின்றது. ஆகையால் இது போன்ற வசதிகளையும் கவனிக்க வேண்டும் என்கின்றன இந்த நிறுவனங்கள்.

அதனால் வேலையில் சேரும் போது ஊதியத்தை மட்டுமே பார்க்காமல் நமக்கு முக்கியமான மற்ற விஷயங்களையும் மறக்காமல் கவனிப்பது நல்லது.

# குறுக்கெழுத்துப் போட்டி இல-79



*அனுப்பவேண்டிய முகவரி:*

**குறுக்கெழுத்துப் போட்டி இல - 79**
**'வலம்புரி – சங்குநாதம்'**
**இல-03, 2ஆம் ஒழுங்கை,**
**பிறவுண் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

முழுப்பெயர் :- ........................
முகவரி :- ........................
........................
........................

இங்கே வெட்டுக ------------------------

*மேலுள்ள கூப்பனில் விடைகளை நிரப்பி எதிர்வரும் 01ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்கவும்.*

## இடமிருந்து வலம்

(1)தேர். (4)சுணக்கம் - இப்படியும் கூறலாம். (5)மகிழ்ச்சி. (7)விரைவு (வ.இ). (9)பக்தன். (10)விருட்சங்களிலொன்று.

## மேலிருந்து கீழ்

(1)செல்வம் - இப்படியுமழைப்பர். (2)புண்ணிய இடம். (3)இவை நோய்களைக் குணப்படுத்தும் (செடி). (6)பழிக்குப் பழி. (8)வெற்றிபெற்றோருக்குக் கிடைப்பது (குழம்பியுள்ளது).

### குறுக்கெழுத்துப் போட்டி இல - 77 இன் விடைகள்

## இடமிருந்து வலம்

1.வைதேகி 3.உவகை 5.வணிகன் 6.கொம்பு 9.போதம் 10.தகர் 11.மீன்

## மேலிருந்து கீழ்

1.வைணவம் 2.கிரகம் 4.வதனம் 6.கொத்தன் 7.புகார். 8.பேதம்.

## பரிசுபெற்றோர் பெயர் விபரம்

முதற் பரிசு :- மா.காஞ்சனா
புகையிரதநிலைய வீத,
கோண்டாவில்.

இரண்டாம் பரிசு :- த.பிரதீபன்
கம்பர்மலை,
வல்வெட்டி.

மூன்றாம் பரிசு :- ஏ.வாசவி
இல.620, நாவலர் வீதி,
அரியாலை.

**போட்டியில் கலந்துகொண்டு பாராட்டுப்பெறும் அதிர்ஷ்டசாலிகளின் பெயர் விபரம்:**

பா.செல்வராணி, வட்டுக்கோட்டை. செ.இராசதேவி, கோப்பாய். யோ.சிவாஜினி, சாவகச்சேரி. வ.மன்னர் அன்ரனி, குருநகர். க.குருநாதன், கோண்டாவில். வி.இளங்கோ, கோப்பாய். S.சுதர்சன், நாவலர் வீதி. சொ.நித்தியா, கொக்குவில். து.நக்கீரன், மல்லாகம். லோ.சுவஸ்திகா, உடுப்பிட்டி. அ.அனித்தா, சித்தன்கேணி.

# உங்களுக்குத் தெரியுமா?

- நீலத் திமிங்கலத்தின் நாக்கின் எடை யானையின் எடையைவிட அதிகமானது.
- கங்காரு நிமிர்ந்து நின்றால் அதன் உயரம் கிட்டத்தட்ட 7 அடி இருக்கும்.
- நத்தை தொடர்ச்சியாக மூன்று ஆண்டுகள் தூங்கும் தன்மை கொண்டது.
- நீலநிறப் பறவையால் ஊதா நிறத்தைப் பார்க்க முடியாது.
- பூனைகளுக்கு இனிப்பான உணவுப் பொருட்களைக் கண்டால் அலர்ஜி.
- ஆமைக்கு பல் கிடையாது. கனத்த ஈறு போன்ற அமைப்பாலேயே அது உணவுகளைச் சுவைத்து விழுங்குகிறது.
- ஒரு வருடத்தில் தன் எடையைப் போல் பத்து மடங்கு உணவைக் குதிரை உட்கொள்கிறது.
- உணவு நீர் எதுவும் இன்றி 15 நாட்கள் தாக்குப்பிடிக்கும் சக்தி குதிரைக்கு உண்டு.

# கிருபானந்தவாரியார் வாழ்க்கை வரலாறு

72



கோவை R.S.புரத்தில் வேங்கடசாமிசாலையில் காம கோடி வித்யாமந்திர் என்ற நிறுவனத்துக்கும் இருமுறை தொடர் விரிவுரை செய்து நிதி வசூலித்துத்தந்தேன்.

கோவை R.S. புரம் உயர் திரு பக்தமாமணி K.R.பாண்டு ரங்கம் செட்டியார் இல்லத்தில் தங்கி முருகனுக்குச் சிறப் பான வழிபாடு செய்வேன். ஒவ்வொரு முறையும் புதுமை யான அலங்காரங்கள் செய்வித்து, முருகன் கண்கொள்ளாத காக்ஷியாகத் தெரிசனை தருமாறு செய்வார். என்னிடம் ஆழ மான அன்புடன் பழகுவார். சிரவணபுரத்து முருகனுக்கும், பால தண்டாயுதபாணி கோயில் முருகனுக்கும் தங்க அங்கி செய்து பாண்டுரங்கம் செட்டியார் பெரும்புண்ணியத்தைப் பெற்றவர். மிக்க அடக்கமாக ஆடம்பரம் இன்றி இறைபணி செய்வார். ஒவ்வொரு மாதமும் விசாக நட்சத்திரத்தில் மருத மலையில் அன்பருடன் சென்று சிறந்த அபிஷேகம் செய்வித்து சேவித்து மகிழ்வார்.

ஒருநாள் என்னைப் பார்த்து "சுவாமி! தங்கள் ஜாதகத்தைக் கொடுங்கள்" என்று கேட்டார். அவர் எதற்காகக் கேட்கிறார் என்பது எனக்கு அப்பொழுது புரியவில்லை அவர் என் ஜாதகத்தைப் பார்த்து என்னுடைய வயதைத் தெரிந்துகொண்டு, 1976 ஆவணி மாதம் சுவாதி நட்சத்திரத்தில் என்னுடைய 70ஆவது ஆண்டு நிறைவு-பவள விழா-செய்யத் திட்டமிட்டார்.

அவர் இதை என்னிடம் கூறினால் நான் இசையமாட்டேன் என்று கருதினார். சிரவண புரம் கௌமாரமடம் ஆதீனகர்த்தர் மகா சந்நிதானம் தவத்திரு சுந்தரசுவாமிகளிடம் கலந்து அந்த மடத்திலேயே இதைச்செய்ய ஏற்பாடு செய்தார். ஒருநாள் சுந்தரசுவாமி கள் என்னைப் பார்த்து, "மடத்தில் தங்களுக்குப் பவளவிழா செய்ய இருக்கின்றோம். நீங்கள் மறுக்கக்கூடாது" என்றார்.

நான் சுவாமிகளைப் பார்த்து "சுவாமி! நான் ஆடம்பரத்தை விரும்பாதவன். விழா என்று வைத்தால் பலர் பரிசுப்பொருள்கள் தருவார்கள். அது பிறவியைக் கொடுக்கும் என்று கருதி என்னுடைய 60 நிறைவை ஒருவருக்கும் கூறாமல் ஸ்ரீசைலம் சென்று இர கசியமாகச் செய்துகொண்டேன். இந்த விழா எனக்குச் செய்வது சைவனுக்கு முட் டையை இலையில் படைத்தது போலாகும். இதை நான் விரும்பவில்லை". என்று பல முறை கூறியும் சுவாமிகள் விட்டபாடில்லை. "மடத்தில் நாங்கள் செய்கின்றோம். தாங் கள் மறுக்கக்கூடாது" என்று கட்டளையிட்டது போல் கூறிவிட்டார்.

பெரிய அளவில் சுவரொட்டித்தாள்கள் அச்சிட்டும், நல்ல விதமாய் விளம்பரங்கள் செய்தும் 1976ஆவணி சுவாதி நட்சத்திரத்தில் மூன்று நாள் குண்டமண்டலங்கள் இட்டு ஆதிசைவ சிவாச்சாரியர்கள் சிவவேள்வி செய்து, எனக்கு அபிஷேகம் செய்து பவள விழாவைக் கொண்டாடினார்கள். விழாவில் இன்னிசையரங்குகளும் திருமுறைப் பாராயணங்களும், நாட்டிய நாடகங்களும், அன்னதானமும் சிறப்பாக நடைபெற்றன.

இத்தனை நிகழ்ச்சிகளையும் பின்னின்று தனது சொந்தப் பொருட் செலவில் நடத்தி யவர் என் ஆப்த நண்பர் K.R. பாண்டுரங்கம் செட்டியார் அவர்கள். இந்த விழா நடை பெறுகின்ற பொழுது என்னுடைய உள்ளத்தில் ஒரு நேரிசை வெண்பா எழுந்தது. அது தான் இது:-

**வேண்டு பவர்கெல்லாம் வேண்டுவன ஈந்தருளும்**
**பாண்டுரங்கம் செட்டியார் பண்புடையார் - ஈண்டுலகில்**
**தேடிய செல்வம் திருப்பணிக்கே நல்குமிவர்**
**கோடிக் கொருவரெனக் கூறு**

## குமாரசாமிப் பேட்டை பவளவிழா

தருமபுரிக்கருகில் குமாரசாமிப்பேட்டை என்பது முருகனுடைய ஒரு திருத்தலம். என் தந்தையார் கந்தபுராணம் தருமபுரியில் விரிவுரை செய்தபொழுது நான் இளமைப்பரு வத்தில் கையேடு வாசிப்பேன். அப்பொழுது முதல் குமாரசாமிப் பேட்டையிலுள்ள அன்பர்களுடன் அதிகமாகப் பழகினேன். அந்த ஊரில் தண்ணீரில் படுக்கும் வித்தை யைப் பழகிக்கொண்டேன். நான் பலமணி நேரம் தண்ணீரில் ஆடாமல் அசையாமல் படுத்திருப்பேன்.

குமாரசாமிப்பேட்டையில் என்னுடைய அபிமானப் புதல்வர் N.பழநிசாமி என்பவர் தன் ஊரில் எனக்குப் பவள விழாக்கொண்டாட வேண்டுமென்று திட்டமிட்டார். நான் தைப்பூச விழாவிற்குக் குமாரசாமிப்பேட்டைக்கு விரிவுரைசெய்யப் போவதுண்டு. 1977 தைமாசம் பூசவிழாவில் பவளவிழா வெகு சிறப்பாகக் கொண்டாடினார்கள்.

வாகீச கலாநிதி திரு கி.வா.ஜகன்னாதையர் அவர்கள் வந்து பாராட்டுரை அழகாகப் பகர்ந்தார். அன்றிரவு அலங்கரித்த மின்விளக்குத் தேரில் என்னை அமரவைத்து ஊர்வ லம் செய்வித்தார்கள். ஊர்வலம் ஒருமைல் நீளத்தில் இருந்தது. மேளம், பஜனைகள், கோலாட்டம், வாணவேடிக்கை முதலியன வரிசையாகத் தேருக்கு முன்னால் அணிவகுத் துச் சென்றன.

## நெல்லிக்குப்பம் பவளவிழா

நெல்லிக்குப்பத்தில் வீரபத்திர சுப்ரமண்ய சுவாமி கோவில் திருப்பணி பல அன்பர் களின் உதவியைக் கொண்டு செய்து முடித்தேன். அந்தக் கோயில் பரம்பரை ஸ்தானீ கரும், நம் அன்பருமாகிய ராமநாதத் தம்பிரான் 1977 பங்குனி உத்திரத்தின் போது வீரசைவ சிவாச்சாரியர்களை வைத்து சிவாக்கினி வளர்த்து அபிஷேகம் செய்தார்.

மேல்பட்டாம்பாக்கம் முருகன் கோவிலிருந்து அலங்கரித்த புஷ்ப ரதத்தில் இருத்தி, 60 காளைகள் பூட்டி 3 மைல் தூரம் ஊர்வலம் நடைபெற்றது.

## சிதம்பரத்தில் பவளவிழா

சிதம்பரத்தில் தருமகுணசீலர் திரு.ரத்தினசாமி செட்டியாருடைய புதல்வர் அன்பும், அடக்கமும், பண்பும் நிறைந்த R.பாலசுப்பிரமணியமும் என் ஆப்த நண்பர் திரு D.வீரப்ப முதலியாரும், ஏனைய நண்பர்களும் சேர்ந்து 1977 ஆவணி மாதம் ஸ்வாதி நட்சத்திரத் தன்று இளமையாக்கியார் கோவிலில் யாகாதி க்ருத்தியங்களைச் செய்து அபிஷேகம் செய்தார்கள்.

திரு. திருக்குறள் முனுசாமி அவர்கள் அவருக்கே உரிய தனிப்பாணியில் பாராட்டுரை பகர்ந்தார். அலங்கரித்த மயில் விமானத்தில் ரதவீதியில் ஊர்வலம் நடாத்தினார்கள்.

## வேலூரில் பவளவிழா

வேலூரில் ஸ்கந்தர் ஷஷ்டி விழாவின் பொழுது ஆதிசைவ சிவாச்சாரியர்கள் சிவ வேள்வி செய்து 70 குடங்கள் வைத்து இரண்டு நாள் வேத பாராயணம், திருமுறைப் பாராயணம் செய்வித்து அபிஷேகம் செய்தார்கள். 70 ஏழைகளுக்குப் புடவைகளும், வேட்டிகளும் வழங்கினார்கள். (தொடரும்)

# நற்பெரும் உயிரை ஈந்தோர்!




நெஞ்சிலே உறுதி கொஞ்ச
நேரிய கொள்கை விஞ்ச
துஞ்சிய வீரர் தந்த
துயரது நீங்கா காணீர்!

அச்சமே கொன்ற பேர்கள்
அறவழி சென்ற பேர்கள்
துச்சமாய் மனித வாழ்வை
தூசெனத் துறந்த பேர்கள்

மற்றவர் வாழ்வு என்றும்
மகிழ்வுடன் அமைய வேண்டி
நற்பெரும் உயிரை நீத்தோர்
நம்மவர் தெய்வ மன்றோ!

மாங்குளம் பி.திவ்யன்

# நினைவில் நிறைந்தவர்கள்

தமிழீழ தனியரசின்
உதயத்திற்காய் போராடி எழுந்தவர்கள்
தமிழினத்தின் தேசிய வாழ்வின்
இருப்புக்காய் போராடி எழுந்தவர்கள்
ஒப்பற்ற விடுதலைக்காய்
ஓரணியில் போராடி எழுந்தவர்கள்,
சுய நிர்ணய சுதந்திர உரிமைக்காய்
சுதந்திர வேட்கையுடன் போராடி எழுந்தவர்கள்
எப்போதும் எம் நினைவில் இருப்பார்கள்
செத்தாலும் விகாத புகழுடனே

ஈழத்தரசன்

# நாடாளுமன்றுக்கு செல்வார் சந்திரிகா?

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்லுக்குப் பின் னைய திருப்பங்களில் ஒன்றாக அரசியலிருந்தே ஓய்வுபெறப்



போவதாக அறிவித்து வந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் நாடாளுமன் றத்திற்குத் திரும்ப உள்ளதாக கூறப்படுகிறது.

மறைந்த முன்னாள் வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் நாடாளுமன்ற ஆச னத்துக்கு தேசியப் பட்டியலின் மூலம் சந்திரிகா தெரிவுசெய்யப் படுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இருப்பினும், தேசியப் பட்டி யலுக்கான தெரிவை சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன மூலமாக சந்திரிகாவிடம் மஹிந்தவின் நெருங்கிய சகாவான பஸில் அழ கப்பெருமா அனுப்பியுள்ளதாக வும் காதிர்காமரின் இடத்திற்கான தெரிவை தமக்காக நிறுத்தி வைக்குமாறு சந்திரிகா கூறியுள் ளதாகவும் நேற்று முன்தினம் இரவு கொழும்பில் பரபரப்பு ஏற் பட்டது.

இது விடயத்தில் இறுதி முடி வெடுப்பதற்காக கட்சித் தலை வராக உள்ள சந்திரிகா குமார துங்க, எதிர்வரும் திங்கட்கிழமை சுதந்திரக் கட்சியின் மத்தியக் குழுக் கூட்டத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

சுதந்திரக்கட்சியின் மூத்த உறுப்பினர்கள் ஆதரவுடன் தாம் தெரிவுசெய்யப்பட வேண்டும் என் பதற்காக சந்திரிகா இந்தக் கூட் டத்தைக் கூட்டியுள்ளதாக சுதந் திரக்கட்சியினர் தெரிவித்துள்ளனர்.

கதிர்காமரின் படுகொலையை அடுத்து வெற்றிடமாகி இருந்த இந்த ஆசனத்துக்கு கடந்த 3 மாத காலமாக யாரையும் சந் திரிகா நியமிக்க இருந்ததற்கும் இதுவே காரணம் என்றும் சுதந் திரக்கட்சி வட்டாரங்கள் சுட்டிக் காட்டுகின்றன. (ற)

# பாதுகாப்பு அமைச்சகத்தின் செயலாளராக தனது சகோதரரை நியமிப்பார் மஹிந்த?

(கொழும்பு)

பாதுகாப்பு அமைச்சகத்தின் செயலாளராக ஓய்வுபெற்ற கேண லும் தனது சகோதரருமான கொட்டபாய ராஜபக்ஷவை நிய மிக்க ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ முடிவெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது, ஓயவுபெற்ற மேஜர் ஜெனரல் அசோக ஜயவர்த்தன அப்பொறுப்பில் உள்ளார்.

தனது சகோதரரின் நியமனம் தொடர்பான உத்தரவை விரைவில் மஹிந்த வெளியிடக்கூடும் என்று தென்னிலங்கை அரசியல் வட் டாரங்கள் தெரிவிக்கின்றன. (ற)

# பிரபாவின் பிறந்தநாளுக்கு ஜனாதிபதி மஹிந்த வாழ்த்து?

## அமைச்சர்கள் மஹிந்தவுக்கு ஆலோசனை

நாட்டின் இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வை காண் பதற்கான சமாதான முயற்சிகளை கூடிய விரைவில் ஆரம்பிப்பதென நேற்று முன்தினம் நண்பகல் ஜனா திபதி மஹிந்த ராஜபக்ஷ தலை மையில் நடைபெற்ற புதிய அமைச சரவையின் முதலாவது கூட்டத் தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

புதிய அமைச்சரவை நேற்று முன்தினம் காலை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ முன்னிலை யில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டபின் முதலாவது அமைச் சரவைக் கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் இனப்பிரச் சினைக்கான அரசியல் தீர்வு, மாவீரரின் நாளையொட்டி தமி ழீழத் தேசியத்தலைவர் வே.பிர பாகரன் ஆற்றவுள்ள உரை என் பன குறித்தும் அமைச்சர்கள் கருத்துத் தெரிவித்தாகத் தெரிய வருகிறது.

தேசியத்தலைவர் நாளை சனிக்கிழமை தனது 51ஆவது அகவையில் காலடி எடுத்துவைப் பதை இட்டு, அன்றைய நாள் ஜனாதி பதி அவருக்கு பிறந்த நாள் வாழ்த் துக்களை தெரிவிப்பதுடன் அவரை நேரடியாகச் சந்திக்க விரும்பும் வடயத்தை உத்தியோகபூர்வமாக அறிவிக்க வேண்டும் எனவும் அமைச் சர்கள் சிலர் கருத்துத் தெரிவித்த தாகவும் தெரியவருகிறது. (ற)

# அதிவேகமாகச் செலுத்தப்படும் வாகனங்கள்; மாவட்ட சமூக பாதுகாப்புக் குழு விசனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பொது மக்களுக்கான போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டுள்ள அரச மற்றும் தனியார் வாகனங்கள் வீதிகளில் அதிவேகமாகச் செலுத்தப்பட்டுவருவது குறித்து மனித உரிமைகளை மேம்படுத்தலுக்கும், பாதுகாத்தலுக்குமான மாவட்ட சமூக பாதுகாப்புக் குழு மிகுந்த விசனத்தை வெளிப்படுத்தியுள்ளது.

மேற்படி குழுவின் பிரதித் தலைவர் வீ.ஸ்ரீ சக்திவேல் தலைமையில் கோவில் வீதியிலுள்ள இணையச செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்திலேயே இவ்விதமான விசனத்தையும் அதிருப்தியையும் கூட்டத்தில் பங்குகொண்டிருந்தோர் வெளிப்படுத்தியிருந்தனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாக்க வேண்டியவர்கள் தமது கடமைகளையும், பொறுப்புக்களையும் நேர்த்தியான முறையில் செய்யாமல் இருப்பதாலேயே போக்குவரத்துச் சேவைகளில் அத்துமீறல் சம்பவங்கள் இடம்பெற்றுவருகின்றன. இதனால் அரச மற்றும் தனியார் போக்குவரத்து வாகனங்களில் பயணிக்கின்ற பொதுமக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு உள்ளாக்கப்பட்டு வருகின்றனர் எனவும் வாகனங்களின் அதிகரித்த வருமானங்களை மட்டுமே கருத்தில் கொண்டு அரச மற்றும் தனியார் வாகனங்கள் செயல்பட்டு வருகின்றன என்றும் சுட்டிக்காட்டப்பட்டன.

இதேசமயம் யாழ்ப்பாண நகர வீதிகளில் பயணிக்கும் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் துவிச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் வீதிப்போக்குவரத்து விதிகளையும், நடைமுறைகளையும் பின்பற்றுவதில்லை எனவும் கூறப்பட்டுள்ளது.

இது இவ்விதமிருக்க மேற்படி பாதுகாப்புக் குழுவினர் விரைவில் அரச மற்றும் தனியார் போக்குவரத்துச் சேவை அமைப்புக்களின பிரதிநிதிகளுடன் போக்குவரத்துச் சேவைகள் தொடர்பான விடயங்கள் குறித்து விரிவாக ஆராயவுள்ளதாகவும் தெரியவருகின்றது. (த-16)

## யாழ்.மாநகர சபைக்குட்பட்ட வீதிகளில்

# உறுதிமொழி வழங்கப்பட்ட போதிலும் வீதி விளக்குகள் பொருத்தப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

யாழ்பபாணம் மாநகர சபைக் குட்பட்டிருக்கும் வீதிகளுக்கு தெரு விளக்குகள் பொருத்தப்படும் எனப் பல தடவைகள் அரச தரப்பினால் உறுதிமொழி அளிக்கப்பட்டிருந்த போதிலும் கூட, இத்திட்டம் இன்னமும் அமுல்படுத்தப்படாமை குறித்து யாழ்.நகரத்தின் அபிவிருத்தி ஆர்வலர்கள் மிகுந்த அதிருப்தியையும், கவலையையும் தெரியப்படுத்தியுள்ளனர்.

யாழ்.நகரப் பகுதியில் இடம்பெற்று வரும் வீதித் திருட்டுக்களையும் வேறுவிதமான அசம்பாவிதங்களையும் இல்லாமல் செய்வதற்கு தெரு விளக்குகள் ஒரு காரணியாகக் கருதப்படுகின்ற போதிலும் குறித்த திட்டம் அமுல் செய்யப்படாமல் இருக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதேவேளை யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் அதிகரித்துள்ள வாகன நடமாட்டங்களைக் கட்டுப்படுத்தவும், விபத்துக்களைத் தடுக்கவும் நகரப்பகுதியில் நான்கு இடங்களில் போக்குவரத்து சமிஞ்ஞை விளக்குகள் பொருத்தப்படும் என அதிகாரிகளாலும், பொலிஸாராலும் உறுதியளிக்கப்பட்டிருந்த போதிலும் கூட மாதங்கள் பல கடந்துவிட்ட போதிலும் எத்தகைய அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படவில்லை என நகர அபிவிருத்தியில் ஆர்வமுடையோரால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது இவ்விதமிருக்க, ஆரியகுளம் சந்திக்கு அருகில் அமைந்துள்ள ஆரியகுளத்தில் சூழல் பாதுகாப்புக்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்கிய செடிகளை இல்லாமல் அழிப்பதற்கு பல இலட்சம் ரூபா செலவில் திட்டமொன்று சில மாதங்களுக்கு முன்னர் அமுல்படுத்தப்பட்டது ஆயினும் குறித்த குளத்தில் குறித்த செடியின் பரம்பல் மிகவும் அதிகரித்துக் காணபடுகின்றது. பெரும் நிதி செலவழிக்கப்பட்டிருந்த போதிலும் கூட, குறித்த செடியை குளத்தில் இருந்து இல்லாமல் செய்ய முடியாமல் போய்விட்டமை குறிப்பிடத்தக்கதாகும். (த-16)

## இவ்வாண்டு யாழில்

# குறைவான மழை வீழ்ச்சி; கூடுதலான சேதங்கள்

யாழ்ப்பாணத்தில் 2003, 2004 ஆம் ஆண்டுகளில் ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரையில் பதிவான மழைவீழ்ச்சியுடன் இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் நவம்பர் மாதம் வரையிலான மழை வீழ்ச்சியை ஒப்பிடும் போது இந்த ஆண்டு மழைவீழ்ச்சியின் அளவு குறைவாக இருந்த போதிலும் வெள்ளச் சேதங்களும் இடப்பெயர்வுகளும் அதிகமாக உள்ளதாகத் திருநெல்வேலி வளிமண்டலவியல் பொறுப்பதிகாரி த.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆண்டு ஜனவரி மாதம் முதல் இற்றைவரை 956.7 மி.மீ. மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. இந்த ஆண்டு அதிகூடிய மழை வீழ்ச்சியாக கடந்த 20ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 97.9 மி.மீ மழை வீழ்ச்சியும் அடுத்தநாள் திங்கட்கிழமை 85.6 மி.மீ மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளது.

இந்த மாதத்தில் மட்டும் 539.5 மி.மீ மழைவீழ்சசி பதிவாகியுள்ள போதிலும் கடந்த இரு ஆண்டு மழை வீழ்ச்சியுடன் ஒப்பிடுகையில் இவ்வருட மழைவீழ்ச்சி குறைவானதாகவே காணப்படுகிறது.

2004 ஆம் ஆண்டு 1489 மி.மீ மழைவீழ்சசியும் 2003ஆம் ஆண்டு 1271.9 மி.மீ மழைவீழ்ச்சியும் பதிவாகியுள்ளன.

எனினும் மழை வீழ்ச்சி குறைந்த, சாதாரண பருவமழை பொழிந்த இந்த வருடத்தில்தான் அதிக சேதங்களும் இடப்பெயர்வுகளும் ஏற்பட்டுள்ளன என யாழ்.திருநெல்வேலி வளிமண்டலவியல் பொறுப்பதிகாரி த.பிரதீபன் மேலும் தெரிவித்தார். (த-36)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

பாராளுமன்ற தமிழ் சுருக்கெழுததாளர் பதவிக்கு விண்ணப்பிப்பது தொடர்பான கலந்துரையாடல் ஒன்று நாளை சனிக்கிழமை பப 3.00 மணிக்கு வதிரியில் அமைந்துள்ள வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தில் நடைபெறவுள்ளது.

இக்கலந்துரையாடலில் வேலையாற்ற, கழக முன்னாள் பயிலுனர்களை கலந்துகொள்ளுமாறு கழகச் செயலாளர் கேட்டுள்ளார். (த)

# புதிய அமைச்சரவையில் 'மத' அமைச்சுக்கள் இல்லை

(கொழும்பு)

புதிய அமைச்சர்கள் நியமனத்தில் எந்த மத விவகாரங்களுக்குமான அமைச்சுக்கு அமைச்சர்கள் நியமிக்கப்படவில்லை.

திஸ்ஸ கரலியத்தவை அனைத்து மத விவகாரங்களுக்கான பிரதி அமைச்சராக மஹிந்த ராஜபக்ஷ நியமித்துள்ளார்.

முன்னைய அமைச்சரவையில் புத்தசாசன அமைச்சராக ரட்ண சிறி விக்கிரமநாயக்க, கிறிஸ்தவ விவகாரங்களுக்கான அமைச்சராக மில்றோய் பெர்னாண்டோ, இந்து சமய அமைச்சராக டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் நியமிக்கப்பட்டிருந்தனர். முஸ்லிம் விவகாரங்களுக்கான அமைச்சர் நியமிக்கப்படவில்லை.

இதனிடையே பிரதி நிதி அமைச்சர்களாக ரஞ்சித் சியாம்பலபிட்டிய, றோகண திசநாயக்க ஆகியோரும் நியமிக்கபபட்டிருந்தனர்.

பிரதி அமைச்சர்களாக இருந்த விஜதாச ராஜபக்ஷ, சேகு இஸ்ஸதீன், அர்ஜுன ரணதுங்க ஆகியோர் இவ் அமைச்சரவை பதவியேற்பைப் புறக்கணித்தனர்.

ஜே.வி.பி.தலைவர் சோமவன்ச அமரசிங்க, நந்தன குணதிலக மற்றும் ஜாதிக ஹெல உறுமயவின் அத்துரலிய ரத்ன தேரர் ஆகியோர் பதவியேற்பு நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர். (ற)

# ஊடகக் கலாசாரம் புத்தாக உருவாக்கப்படும்

உண்மையான தகவல்களைச் சரியான முறையில் மக்கள் மத்தியில் கொண்டு செல்லக்கூடிய புதிய ஊடகக் கலாசாரத்தை உருவாக்கப்போவதாக ஊடக தகவல் துறை அமைச்சர் அனுர பிரியதர்சன யாப்பா தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் ஜனாதிபதி முன்னிலையில் புதிய அமைச்சராக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டு உரையாற்றிய போது அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கீகரிக்கப்பட்ட ஒழுக்க நெறிகளுக்கு அமைவான தேசிய கலாசாரத்திற்குப் பொருத்தமான ஊடகப் பாரம்பரியத்தை உருவாக்குவதே தமது ஒரே நோக்கம் என்றும் அமைச்சர் தெரிவித்தார். (த-7)

## மஹோற்சவம்

அகில இலங்கை யாழ்.கோண்டாவில் கிழக்கு சபரீச ஐயப்பன் தேவஸ்தான வருடாந்த மஹோற்சவ விழா நாளை முற்பகல் 11.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அடுத்த மாதம் 4ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை 10.00 மணிக்கு தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் 25,26 ஆம் திகதிகளில் நெய்நிரப்புதலும், மண்டல பூர்த்தியும் இடம்பெறவுள்ளது. (த-7)

CARITAS - HUDEC - JAFFNA

VACANCY

**1. Communication Officer**

**Base Station:** Jaffna

**Main Duties:**

- Organizes the logistics of (national and international) media visits to Caritas - HUDEC. (Arranges clearances, accommodation, travels etc)
- Regularly accompanies the visitors on field trips, presents program activities, is in charge of translation and ensures a good understanding by the visitors of the caritas - HUDEC Program activities.
- Assists in the development and production of communication tools and materials for journalists and visitors (maps, background papers, fact sheets, press releases and other data such as photos, interviews and updated activity reports).
- Keeps abreast of developments in local and national affairs.

**Skills Required:**

- Fluency in Tamil and English
- Good Writing and editing skills in English
- Information gathering skills, good knowledge of local newspapers.
- Good interpreting and translating skills.
- Ability to work in the field and travel regularly, including in the vanni area, possibly during the weekend.
- Good team player with good communications skills
- Proficient computer skills (Microsoft Office, Internet, Photoshop)
- Experience in media relations, journalism of corporate communication
- Knowledge of Caritas - HUDEC Tsunami programs a plus

Caritas - Hudec recruits qualified individuals without distinction of ethnic background, religion or gender.

If you would like to be a part of a dedicated team in a humanitarian context, please send us your CV & motivation letter including your contacts & minimal two references to the following address, latest by 3, December 2005.

**Father Jeyakumar**
**Caritas - Hudec**
**14, Mathew's Road, Deogu street,**
**Jafna. or E.mail:hudec @ sltnet.lk**

**PLEASE SPECIFY THE POST YOU APPLY FOR IN YOUR APPLICATION WITH CONTACT TELEPHONE NUMBERS**

(9982)

# அரசாங்கத்தை பலப்படுத்தும் நடவடிக்கைகளில் ஜே.வி.பி தீவிரம்

(கொழும்பு)

ஜனாதிபதித்தேர்தலுக்கு முன்னர் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுடன் செய்துகொள்ளப்பட்ட கொள்கை உடன்படிக்கைகளுக்கு அமைய உச்சக் கட்ட ஒத்துழைப்போடும் பொறுப்புணர்வோடும் செயற்படவிருப்பதாக ஜே.வி.பி தெரிவித்துள்ளது.

கட்சியின் தலைவர் சோமவன்ஸ அமரசிங்க, கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் கருத்து வெளியிடுகையில், அமைச்சர் பதவிகளை தமது கட்சி ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் அரசாங்கத்தை பலப்படுத்துவதற்கு சகலவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

ஜே.வி.பியின் பொதுச் செயலாளர் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில், அரசாங்கத்தின் உத்தியோக அமைப்பில் தமது கட்சி பங்குபற்றாவிட்டாலும் நடைமுறை ரீதியிலான சகல நடவடிக்கைளிலும் கட்சி பங்குபற்றும் எனக் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு தமது பூரண ஆதரவு வழங்கப்படும் என்றும், அவரின் வெற்றியை முன்னெடுத்துச் செல்வதற்கான சகல நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார். (த-7)

# நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் 513 குடும்பங்கள் இடம்பெயர்வு

(கோண்டாவில்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சமீபத்திய மழையினால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கினால் 513 குடும்பங்களைச் சேர்ந்த 1934 பேர் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இதில் 193 குடும்பங்களின் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் இடம்பெயர்ந்த இவர்கள் தாங்களாகவே அமைத்துக்கொண்ட தற்காலிக வசிப்பிடங்களில் தங்கியுள்ளதோடு, தமக்குரிய உணவைச் சமைக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

இதைத்தவிர, மழை, வெள்ளத்தினால் 264 வீடுகள் இடிந்து விழுந்து விட்டதால் பாதிக்கப்பட்டவர்களில் சிலர் நண்பர்கள் வீடுகளிலும் மற்றும் பொது இடங்களிலும் தங்கியுள்ளனர் என நல்லூர் பிரதேச செயலர் திருமதி எஸ்.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார். (த-36)

# எதிர்க்கட்சியின் பேரணியில் மோதல் பங்களாதேஷில் 150 பேர் வரை காயம்

(டாக்கா)

பங்களாதேஷில் அரசிற்கு எதிராக அந்நாட்டு எதிர்க்கட்சிகள் நடத்திய பேரணியில் ஏற்பட்ட மோதலில் பத்திரிகையாளர்கள் உட்பட 150 பேர்வரை காயமடைந்துள்ளனர்.



பங்களாதேஷை ஆண்டுவரும் தேசியவாத கட்சியின் கொள்கைக்கு எதிராக அந்நாட்டு எதிர்க்கட்சிகள் போராட்டம் நடத்திவருகின்றன. பிரதான எதிர்க்கட்சியான அவாமி லீக் கட்சி அரசிற்கு எதிராக நேறறு முன்தினம் மாபெரும் பேரணியை நடத்தியது. அவாமி லீக் கட்சி தலைவர் ஷேக் ஹசீனா தலைமையில் நடைபெற்ற இந்தப் பேரணியில் ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டனர்.


அரசிறகு எதிராக பேரணியில் கோஷங்கள் எழுப்பப்பட்டன. இதனால் ஆளும் தேசியவாதக் கட்சியைச் சேர்ந்த மாணவர் மறறும் இளைஞர் அணியினர் பேரணியில் கலந்துகொண்டவர்கள் மீது திடீர்த் தாக்குதல் நடத்தினர். இதன் காரணமாக திடீர் மோதல் ஏற்பட்டது. பங்களாதேஷ் பத்திரிகையாளர் சங்கம் அருகே ஒரு பஸ்ஸிற்கு தீ வைக்கப்பட்டதால் பஸ்ஸின் பெட்ரோல் டாங்கி வெடித்துச் சிதறியது இந்த சம்பவத்தில் பத்திரிகையாளர்கள் உள்ளிட்ட 20க்கும் மேறபட்டோர் காயமடைந்தனர்.

மொத்தத்தில் நேற்று முன்தினம் நடந்த இம் மோதலில் 150பேர் வரை காயம் அடைந்துள்ளனர்.

வன்முறை அதிக்ரிக்கவே பொலிஸர் உடனே கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வீசி கூட்டத்தைக் கலைக்க முறபட்டனா.

இதனிடையே, பேரணியில் கலந்துகொண்டவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலைக் கண்டித்து எதிர்வரும் வியாழக்கிழமை நாடு தழுவிய வேலை நிறுத்தத்திற்கு எதிர்க்கட்சித் தலைவர் ஷேக் ஹசினா அழைப்பு விடுத்துள்ளார். (ற)






கென்யாவில் புதிய அரசியல் சட்டத்திற்கான கருத்துக்கணிப்பு நடத்தப்பட்டது. இதற்கு கென்ய அதிபரும் அவரது கூட்டணிக்கட்சியினரும் ஆதரவளித்தனர். ஆனால் புதிய அரசியல் சட்டத்திற்கு ஆதரவாக 43 சதவீத மக்கள் மட்டுமே வாக்களிததனர். 57 சதவீதம் பேர் எதிர்த்து வாக்களித்தனர். நைரோபியில முடிவு அறிவிக்கப்பட்டதும் எதிர்த்து வாக்களித்த ஆயிரக்கணக்கான மக்கள் மகிழ்ச்சியைக் கொண்டாடுகின்றனர்.

# சங்கராமன் கொலைவழக்கு விசாரணை புதுவை நீதிமன்றில் 28ஆம் திகதி ஆரம்பம்

(புதுச்சேரி)

காஞ்சிபுரம் வரதராஜப்பெருமாள் கோவில் மேலாளர் சங்கரராமன் கொலைவழக்கு புதுவை நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. எதிர்வரும் 28ஆம் திகதி இவ் விசாரணை தொடங்கவுள்ளது.



புதுவை நீதிமன்றத்திற்கு பலத்த பாதுகாப்புடன் வழக்கு ஆவணங்கள் எடுத்துச் செல்லப்பட்ட வான்

இந்தநிலையில்,வழக்கு தொடர்பான ஆவணங்கள் நேற்றுமுன்தினம் மாலை புதுவை நீதிமன்றத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

துப்பாக்கி ஏந்திய பொலிஸாரின் பலத்த பாதுகாப்புடன் செங்கல்பட்டு முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் இருந்து ஆவணங்களை புதுவைக்கு கொண்டு சென்றனர்.


புதுவை அமர்வு நீதிமன்ற அலுவலக ஊழியர்கள் இவ் ஆவணங்களை சரி பார்த்துப் பெற்றுக் கொண்டனர். எதிர்வரும திங்கட்கிழமை தொடங்கும் முதல வசாரணையின் போது வழக்கில் குற்றம் சாட்டப்பட்டுள்ள ஜெயேந்திரர், விஜயேந்திரர், சுந்தரேச அய்யர், ரகு, கதிரவன், அபபு, ரவி சுப்பிரமணியம் உள்ளிட்ட 24 பேர் ஆஜராகவுள்ளனர்.

புதுவையில் முதன்மை அமர்வு நீதிமன்றம் தவிர 2ஆவது மற்றும் 3ஆவது அமர்வு நதிமன்றங்கள் உள்ளன. ஆனால், முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் மட்டுமே நீதிபதி உள்ளார். மற்ற இரு நீதிமன்றங்களிலும் நீதிபதிகள் இல்லை. இதனால் முதன்மை அமர்வு நீதி மன்ற நீதிபதியும் தலைமை நீதிபதியுமான சின்னபாண்டியே இந்த வழக்கை விசாரிக்கவுள்ளார்.

இந்த வழக்கு விசாரணையில் கலந்து கொள்ள வசதியாக காஞ்சி சங்கராச்சாரியார்கள் ஜெயேந்திரர் மற்றும் விஜயேந்திரர் விழுப்புரத்தில் உள்ள காஞ்சி வேத பாடசாலையில் தங்கியுள்ளனர். வழக்கின விசாரணை முடியும் வரை விழுப்புரத்திலேயே தங்கி புதுவை நீதிமன்றுக்கு செல்லவும் இவர்கள் முடிவு செய்துள்ளனர். (ற)



வெளிநாடுகளில் இருந்து நிதியுதவிபெறும் தொண்டு நிறுவனங்கள் மீது புதிய கட்டுப்பாடுகள் விதிக்க வகைசெய்யும் சட்டமூலம் மீது ரஷ்ய நாடாளு மன்றத்தின் கீழ் சபையான 'டுமா' வில் நேற்றுமுன்தினம் விவாதம் நடந்தது. இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து மொஸ்கோவில் ஆர்ப்பாட்டம் நடத்தியவர்களை பொலிஸார் கைது செய்கின்றனர்.



அமெரிக்காவின் கலிபோர்ணியா மாநிலம் டான பாயிற் துறைமுகத்துக்கு அருகே குட்டி விமானம் ஒன்று கடந்த 20ஆம் திகதி கடலில் வீழ்ந்து மூழ்கியது. விமானத் தில் இருந்த 4 பேர் பலியாகினர். கடலில் 200 அடி ஆழத்தில் கிடந்த விமானத்தையும் உடல்களையும் நீச்சல் வீரர்கள் நேற்று முன்தினம் மீட்டு மேலே கொண்டுவந்தனர். மீட்கப்பட்ட குட்டி விமானம் கப்பலில் ஏற்றப்பட்டு டானாபையின்ற் கப்பல் கட்டும் தளத்திற்குக் கொண்டுசெல்லப்படுகிறது.

# விசா இன்றி மலேசியாவில் தங்கியுள்ள 50 ஆயிரம் சீனர்களை தேட உத்தரவு

(கோலாலம்பூர்)

மலேசியாவிற்கு சுற்றுலாச் சென்று விசா முடிந்தும் அங்கிருந்து வெளியேறாமல் உள்ள 50ஆயிரம் சீனர்களை தேடிக் கண்டுபிடிக்கும்படி, மலேசியப் பிரதமர் அப்துல்லா அகமது பதாவி உத்தரவிட்டுள்ளார்.

போலி கடவூச்சீட்டு மூலம் மலேசியாவில் தங்க விரும்புவோரை அனுமதிக்க முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

மலேசியா நாட்டிற்கு சீனர்கள் வருகை அதிகமாக இருக்கும். ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான பேர் சென்று சுற்றுலா இடங்களை பார்த்துவிட்டு சென்றுவிடுவர். இது மட்டுமன்றி சுற்றலாவை முடிக்கும் சீனர்கள் வேறு நாட்டுக்கு செல்லவும் மலேசியாவை வழியாக பயன்படுத்துவதும் உண்டு.

இவ் வருட ஆரம்பத்தில் இருந்து எடுத்த கணக்கெடுப்பில், 50 ஆயிரம் சீனர்கள் அவர்களுக்கு அளிக்கப்பட்ட விசா அவகாசத்தைவிட, அதிகமாகவே தங்கி உள்ளனர். அவர்கள் தாங்களாகவே வெளியேறிவிட்டால் நல்லது என்று அறிவித்துள்ளது அரசு. ஆனாலும் இன்னும் பல ஆயிரம்பேர் அங்கு தங்கி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


அடுத்தமாதம், ஆசிய மற்றும் கிழக்காசிய நாடுகளின் மாநாடு, கோலாலம்பூரில் நடைபெறவுள்ளது. அதற்கான ஏற்பாடுகளை அரசு செய்துவருகிறது. இந்நிலையில், இப்படி வெளிநாட்டவர் அதிக அளவில் விசா காலத்தை மீறி தங்கியிருப்பது தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்தும் என்று மலேசிய அரசு தெரிவித்துள்ளது.

சீனத் தூதரகத்தின் ஒத்துழைப்புடன், சுற்றுலா அமைச்சகமும், குடியேற்ற அமைச்சகமும் சேர்ந்து இந்த பிரச்சினையை தீர்க்க வேண்டும் என்று பிரதமர் பதாவி உத்தரவிட்டுள்ளார்.

மலேசியா ஒரு சுற்றுலா நாடு அதில் யாரும் வந்து சுற்றுலா இடங்களுக்கு சென்று போவதில் எந்த தடங்கலையும் ஏற்படுத்த விரும்பவில்லை. ஆனால் மூன்றாவது நாட்டுக்கு போக, மலேசியாவை தற்காலிக தங்குமிடமாக அமைத்துக் கொள்ள சிலர் விரும்புகின்றனர். அதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம் என்றும் பிரதமர் பதாவி கூறியுள்ளார். (ற)

# சதாம் வழக்கு விசாரணை அருத்த வாரம் ஆரம்பம்

(பக்தாத்)



ஈராக்கின் முன்னாள் அதிபர் சதாம் உசன் மீது 180றக்கும் மேறபட்ட ஷியாம் முஸ்லிம்களை கொன்று குவித்தது உட்பட பல்வேறு வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

இந்த வழக்கு விசாரணை மீண்டும் அடுத்த வாரம் தொடங்கவுள்ளது.

இந்த வழக்கு விசாரணையை அமெரிக்காவின் நீதிமன்ற தொலைக்காட்சி நிறுவனம் ஒளிபரப்பவுள்ளது. ஒண்லைன் மூலம் தினமும் 5 மணிநேரம் வழக்கு விசாரணை ஒளிபரப்பப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதற்காக மாதம் 6 டொலர் கட்டணமும் இதற்காக வசூலிக்கப் படவுள்ளது. (ற)

பிறர் மெச்சுவதற்காக செய்யும் செயல் நம்மை நாம் முட்டாளாக ஆக்கிக்கொள்ளத்தான் உதவும்.

-இராமதாஸர்

வலம்புரி

## அவசரப்பட்ட வரவு செலவுத்திட்டம் அடியுண்டு போகுது பார் !

2006 ஆம் ஆண்டிற்காக நிதி அமைச்சராக இருந்த கலாநிதி சரத் அமுனுகமவினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டம் காலாவதியாகி விட்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் வேட்பாளர் மகிந்தராஜபக்ஷ ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்றதையடுத்து புதிய வரவு செலவுத்திட்டம் தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதில் வேடிக்கை என்னவெனில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் நிதியமைச்சராக இருந்த ஒருவர் சமர்ப்பித்த வரவு செலவுத்திட்டம் அந்த அரசினாலேயே நிராகரிக்கப்பட்டமை ஆகும்.

பதவி விலகுவதற்கு முன்னதாக சந்திரிகா குமாரதுங்க, நிதியமைச்சர் மூலமாக சமர்ப்பித்த வரவு செலவுத்திட்டம் ஒரு கணப்பொழுதில் மகிந்த ராஜபக்ஷவினால் தூக்கி எறியப்பட்டது.

இங்கு தூக்கி எறியப்பட்டது வரவு செலவுத்திட்டம் என்பது பொருளல்ல. ஜனாதிபதியாக இருந்தபோது சந்திரிகா குமாரதுங்க போட்ட அனைத்துதிட்டங்களுமே தூக்கிஎறியப்படவுள்ளது. அதற்கான ஓர் அறிகுறியாகவே வரவு செலவுத்திட்டம் தூக்கி எறியப்பட்டுள்ளது.

நான் ஜனாதிபதியானால் வரவு செலவுத்திட்டம் புதிதாக சமர்ப்பிக்கப்படுமென ரணில் விக்கிரமசிங்க தேர்தல் பிரசாரத்தின் போது கூறியிருந்தார்.

அவ்வாறு ரணில் கூறியதில் நியாயப்பாடுகளும் இருக்கவே செய்யும். எதிர்க்கட்சி வேட்பாளர் ஒருவர் ஜனாதிபதியாக வெற்றிபெற்றால் அவர் வரவு செலவுத்திட்டத்தை மாற்றியமைப்பதில் ஆச்சரியப்படுவதற்கொன்றுமில்லை.

ஆனால் தனது கட்சி சமர்ப்பித்த வரவு செலவுத்திட்டத்தை ஜனாதிபதியாக வெற்றி பெற்றவர் மாற்றியமைக்கிறார் எனில் அவற்றில் இருந்து பொதுவாகக்கூறக்கூடிய கருத்து இலங்கையில் வரவு செலவுத்திட்டம் என்பது நாட்டின்-மக்களின் நலன் கருதி தயாரிக்கப்படுவதில்லை என்பதாகும்.

எதிர்வரும் ஆண்டில் நடை முறைப்படுத்துவதற்காக நடப்பு ஆண்டில் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத்திட்டம் என்பது எத்தனையோ ஆய்வுகள் ,அர்ப்பணிப்புகள் ,தரவுத்திரட்டல்கள் ,செலவுகள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டதாகும்.

இவ்விதம் சமர்ப்பிக்கப்படும் வரவு செலவுத்திட்டம் நாட்டு மக்களுக்கு நன்மை பயப்பதாக இருக்கவேண்டும். ஆனால் சந்திரிகா குமாரதுங்க அவர்கள் தனது ஆட்சி முடிவில் வேண்டா வெறுப்பாக ஓர் வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பிப்பதற்கு நிதியமைச்சராக இருந்த கலாநிதி சரத் அமுனுகமவை பாவித்தார்.

ஜனாதிபதியின் கூட்டமைப்புக்கு அமைவாக மகிந்தவின் வெற்றிக்கு எந்த வகையிலும் உதவாத வடிவத்தில் வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டது. இவ்விதம் சமர்ப்பிக்கப்பட்ட வரவு செலவுத்திட்டத்திற்கு நடக்கக்கூடியதென்ன என்பதை சந்திரிகா அம்மையார் அறியாதவர் அல்லர்.

அப்படி இருந்து ஏன் அவர் அவசரப்பட்டு வரவு செலவுத்திட்டத்தை சமர்ப்பித்தார் என்ற கேள்வி மட்டுமே இப்போதைக்கு மிஞ்சியுள்ளது.

# பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்க ஜனாதிபதியின் பிரதிநிதியாக அனுரா

(கொழும்பு)

பொதுநலவாய மாநாட்டில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சிறப்புப் பிரதிநிதியாக சுற்றுலா அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க பங்கேற்க உள்ளதாகத் தெரிய வருகிறது.

இன்று முதல் எதிர்வரும் 27ஆம் திகதி வரை மோலட்டாவில் பொதுநலவாய மாநாடு நடைபெற உள்ளது.

இந்த மாநாட்டில் பொதுநலவாய நாடுகளின் அரச தலைவர்கள் அல்லது உறுப்பு நாடுகளில் குறைந்த பட்சம் அமைச்சுத் தகுதி உள்ளவர் ஒருவர் பங்கேற்க வேண்டும்.

கடந்த வாரம் வெளிவிவகார அமைச்சராக இருந்த அனுரா பண்டாரநாயக்க,இந்த மாநாட்டில் கலந்து கொள்வார் என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.அரசியல் மாற்றங்களையடுத்து ஜயந்த தனபாலவை பங்கேற்க மஹிந்த ராஜபக்ஷ அனுமதித்தார்.

தற்போது ரோமில் உள்ள ஜயந்த தனபால அந்த மாநாட்டில் பங்கேற்க இயலாத நிலையில் ஏற்கனவே திட்டமிட்டபடி அனுரா பண்டாரநாயக்கவை இதற்கு அனுப்புவது என்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

பொதுநலவாய வெளிவிவகார அமைச்சர்களின் ஆலோசனைக் கூட்டம் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதில் இலங்கை வெளிவிவகார அமைச்சர் பங்கேற்காத நிலையில் இலங்கையின் லண்டன்தூதுவர் கேசுனக செனிவிரட்ன இதில் கலந்துகொண்டார்.

மேலும்,பொதுநலவாய உறுப்பு நாடுகளான கனடாவில் அரசியல் நிலையற்ற தன்மை உள்ளது. இந்தியாவின் வெளிவிவகார அமைச்சராக இருந்த நட்வர்சிங் பதவி விலகியுள்ளதால் இந்தியப் பிரதிநிதிகளும் இதில் பங்கேற்கமாட்டார்கள் என்று கூறப்படுகிறது.

பங்களாதேஷில் அரசுக்கு எதிராக போராட்டம் நடைபெற்று வருகிறது என்பதும் குறிப்பிடத்தக்கது.(ற)

# முல்லை மணிக்குப் பாராட்டுவிழா

(வவுனியா)

யாழ்.பல்கலைக்கழகம் இலக்கியவாதியான முல்லைமணிக்கு கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கிக் கௌரவித்துள்ளது.இது வன்னிப் பிரதேசத்திற்கு வழங்கப்பட்ட கௌரவமாகும்.இதுபோன்ற இன்னும் பலர் வன்னிமாவட்டத்திலே உருவாகவேண்டும்.

மேற்கண்டவாறு மூத்த கலைஞரும் இலக்கியவாதியுமான வே.சுப்பிரமணியத்(முல்லைமணி)திற்கு யாழ். பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கியதையடுத்து நடத்தப்பட்ட பாராட்டு விழாவிலே பிரதமவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி கே.பேனாட் குறிப்பிட்டார்.

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி தமிழ் மன்றமும் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும் இணைந்து நடாத்திய இப் பாராட்டு விழாவிற்கு தமிழ்மணி அகளங்கன் தலைமை தாங்கினார். ரீ.மகிழ்ராஜன் வரவேற்புரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து உரையாற்றிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி பேனாட் கல்வியால் உயர்பவர்களுக்குக் சென்ற இடமெல்லாம் சிறப்புண்டு.ஆகவே ஒவ்வொருவரும் கல்வியால் உயர்வடைய முயற்சிக்கவேண்டும் ஒவ்வொரு மனிதனும் முயற்சியின் மூலமே வாழ்க்கையில் முன்னேற முடியும். முல்லைமணிக்கு கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கப்பட்டிருப்பது மிக மகிழ்ச்சிக்குரியது.முல்லைமணி போன்று இன்றும் பலர் தோன்றி எமது மண்ணுக்கு பெருமைதேடி கொள்ளவேண்டும்.இச் சிந்தனை இங்குள்ள ஒவ்வொருவர் மனதிலும் ஏற்பட வேண்டும். முல்லைமணியவர்கள் பல்லாண்டு வாழ்ந்து எமது மக்களுக்கு சேவையாற்ற வேண்டும்.அவரது வாழ்வும் சுபீட்சம் பெற வேண்டும் என்றார்.

தமிழ்மணி அகளங்கன் தனது தலைமையுரையில் வன்னிமாவட்டத்தின் முதல் கலாநிதியாக கலாநிதி முல்லைமணி விளங்குவது மகிழ்சிக்குரியது. யாழ். பல்கலைக்கழகம் இவருக்கு கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கியமை பாராட்டுக்குரியது. அதற்கு நன்றி தெரிவிக்கவேண்டும் என்றார். கலாநிதி முல்லைமணி ஆரம்பத்தில் கல்லூரி வாசலிலிருந்து மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டு விழா மண்டபம் வரை அழைத்து செல்லப்பட்டார். இறுதியிலே பல பெரியோர்கள் அவருக்கும் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.கலாநிதி முல்லைமணிஏற்புரை நிகழ்த்தினார் செல்வி.ஏ.பவப்பிரியா நன்றியுரை நிகழ்த்தினார்.பண்டாரவன்னியன் நாடகமும் இடம்பெற்றது. (த-52)

# அரசியல்துறை அலுவலகம் கடற்படையால் தாக்குதல்

(கிளிநொச்சி)

யாழ்.தீவகத்தில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறை அலுவலகம் மீது கடற்படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர் என்று விடுதலைப்புலிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர். இது தொடர்பாக விடுதலைப்புலிகளின் சமாதான செயலக செய்திக்குறிப்பு ஒன்றை வெளியிட்டுள்ளது.

.அரசியல்துறை அலுவலகத்தின் பூட்டை உடைத்து உள்நுழைந்த கடற்படையினர் பெயர் பலகைகளையும் தளபாடங்களையும் சிதைத்துள்ளனர். பாடசாலைகளுக்குள்ளும் நுழைந்து தளபாடங்களை தீக்கிரையாக்கியுள்ளனர். கடந்த ஞாயிற்றுக்கிழமை முதல் அப்பிரதேசத்தில் தொலைபேசி இணைப்புக்ளும் துண்டிக்கப்பட்டுள்ளது என்று அச் செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-4)

# பரிசளிப்பு நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மாவீரர் நாளை முன்னிட்டு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையால் நடாத்தப்பட்ட கவிதைப்போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கான பரிசளிப்பு நிகழ்வு நாளை காலை 10 மணிக்கு சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வின்போது தமிழீழத்தேசியத்தலைவர் வே.பிரபாகரனின் பிறந்த நாளை முன்னிட்டு உயர் கல்வி நிறுவன மாணவர்களின் வசதி கருதி துவிச்சக்கர வண்டிகளும் வழங்கப்படவுள்ளது. (ச)

# மாவீரர் எழுச்சி நாள்...

யாழ்.குடாநாட்டில் மாவீரர் நாளிற்கான ஏற்பாடுகளை யாழ்.மாவட்ட மாவீரர் நாள் ஏற்பாட்டுக்குழு ஒழுங்கு படுத்தியுள்ளது. யாழ்.மாவீரர் துயிலும் இல்லங்களான கோப்பாய்,தீவகம்,தென்மராட்சி, வடமராட்சி துயிலும் இல்லங்களிலும் தேசியக்கொடியேற்றல், பொதுச்சுடர் ஏற்றல்,நினைவுச்சுடர் ஏற்றல் ஆகியவற்றுடன் நிகழ்வுகள் நடைபெறுகின்றன. யாழ்.குடாநாட்டில் 21 ஆம் திகதியில் இருந்து 26 ஆம் திகதிவரை கிராமரீதியாக சனசமூக நிலையங்கள், மாதர் அமைப்புக்கள், விளையாட்டுக் கழகங்கள்,கிராம முன்னேற்றச் சங்கங்கள் ரீதியாக அந்தந்தப் பகுதி மாவீரரின் பெற்றேர்கள் அழைக்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டு வருகின்றனர்.

எழுச்சிக்கோலமாக வீதிகளில் சிவப்பு, மஞ்சள் கொடிகள் கட்டப்பட்டு சந்திகளில் அலங்கார வளைவுகள் கட்டப்பட்டும் வருகின்றன.

இதன் இறுதி நாள் நிகழ்வ்கள் யாழ்.மாவட்டத்தில் நான்கு இடங்களில் நடைபெறவுள்ளன. தீவகப்பகுதியில் வேலணை சாட்டியில் அமைந்துள்ள துயிலும் இல்லத்தில் பிற்பகல் 1 மணிக்கு அப்பகுதி மாவீரர்களின் பெற்றோர்கள் அழைக்கப்பட்டு சிறப்பிக்கப்படுவர்.

பின்னர் பாண்ட் வாத்திய இசையுடன் துயிலும் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்படுவர். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையில் வன்னி மாவட்டத்தில் இருந்து வரும் பெற்றோர்களும் யாழ்.நல்லூர் பிரதேச பெற்றோர்களும் சிறப்பிக்கப்பட்டு துயிலும் இல்லத்திற்கு அழைத்து வரப்படுவார்கள்.

மட்டக்களப்பு, வவுனியா மாவட்டத்தைச் சேர்ந்த பெற்றோர்கள் கோப்பாய் கல்வியியற் கல்லூரியில் சிறப்பிக்கப்பட்டு துயிலும் இல்லத்திற்கு அழைத்து வரப்படுவர். இவர்களுடன் கோப்பாய் அச்சுவேலிப் பகுதி மாவீரர் பெற்றோர்களும் உள்ளடக்கப்படுவார்கள். உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயத்தில் சங்கானை, ஆகிய பிரதேச பிரிவைச் சேர்ந்த மாவீரர் பெற்றோர் அழைக்கப்பட்டு துயிலும் இல்லத்திற்கு அழைத்துசெல்லப்படுவர்.

கொடிகாமம் துயிலும் இல்லத்தில் தென்மராட்சி பகுதி மாவீரர் பெற்றோர்கள் கொடிகாமம் திருநாவுக்கரசு மகாவித்தியாலயத்தில் சிறப்பிக்கப்பட்டு துயிலும் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

கொடிகாமம் துயிலும் இல்லத்திற்குரிய வெளிமாவட்டத்தில் இருந்து வரும் மாவீரர் பெற்றோர்கள் கொடிகாமம் கண்டி வீதியில் அமைந்துள்ள நாவலடி அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் சிறப்பிக்கப்பட்டு துயிலும் இல்லத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள்.

இவர்களுக்கான போக்குவரத்துக்களை அந்தந்தப் பகுதி மாவீரர் நாள் ஏற்பாட்டுக் குழுக்கள் ஒழுங்கு செய்துள்ளன. இந்த ஒழுங்கு படுத்தலுக்கு அமைவாக மாவீரர் பெற்றோர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு யாழ்.மாவட்ட மாவீரர் நாள் ஏற்பாட்டுக்குழுவினர் அழைப்பு விடுத்துள்ளனர். (ச-4.8)

## தினசரி தியானம்

## விவேகச் சிந்தனைகள்



துன்பத்தைத் துரத்துவதற்கு எல்லாவற்றையும் விட மிகச் சிறந்த மருந்து அதைப் பற்றி நினைப்பதை விட்டு விடுவது தான். ஏனெனில் அதைப்பற்றி நினைப்பதால் அது எதிரே வந்து நிற்கிறது. முன்பை விடப் பெரிதாகிறது.

சுவாமி விவேகானந்தர்

# ஆனையிறவில் அமைக்கப்பட்ட நினைவாலயம் நேற்று திறப்பு

(கிளிநொச்சி)

ஆனையிறவுப்பகுதியில் பிரமாண்ட மானஅளவில்அமைக்கப்பட்ட 3ஆயிரத்துக் கும் அதிகமான மாவீரர்களின் திருவுருவப் படங் கள் வைக்கப்பட்ட நினைவாலயம் நேற்று திறந்து வைக்கப்பட்டது.

நேற்று மாலை 5.30 மணிக்கு ஆரம் பமான இந்நிகழ்வில் தளபதிகள், பொறுப் பாளர்கள், போராளிகள் உட்பட பல்லாயி ரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

ஆரம்ப நிகழ்வாக பொது சுடரை சோதியா படையணியின் சிறப்புத்தளபதி கேணல் துர்க்கா ஏற்றினார். தமிழீழ தேசியக் கொடியை வட போர் முனைக் கட்டளைத் தளபதி கேணல் தீபன் ஏற்றி னார்.முதல் மாவீரன் லெப்.சங்கரின் திருவு ருவப்படத்திற்கு தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் தியாகம் ஈகச்சுடர் ஏற்றினார். முதல் பெண் மாவீரர் 2 ஆம் லெப்.மாலதியின் திருவுருவப் படத்திற்கு தமிழீழ மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் தமிழினி ஈகச் சுடர் ஏற்றினார்.

தொடர்ந்து முதல் கரும்புலி மாவீரர் கப் டன் மில்லர், முதல் பெண் கரும்புலி மாவீரர் அங்கயற்கண்ணி ஆகியோரின் திருவுரு வப் படங்களுக்கும் ஈகச்சுடர்கள் ஏற்றப்பட் டன. தொடர்ந்து அரங்கு நிகழ்வுகள் நடை பெற்றன. (ச-4)

# தரம் 10 மாணவர்களுக்கான பொதுப் பரீட்சை 29ந் திகதி

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாண கல்வித் திணைக் களத்தினால் நடாத்தப்படுகின்ற தரம் 10 மாணவர்களுக்கான மாகாண மட்ட பொதுப் பரீட்சை எதிர்வரும் 29திகதி தொடக்கம் அடுத்த மாதம் 9 ஆம் திகதி வரை நடைபெற வுள்ளதாக வடகிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் விசாகலிங்கம் அறிவித்துள் ளார். வடக்கு கிழக்கு மாகாணத்தின் தமிழ் மொழி மற்றும் சிங்கள மொழி பாடசாலைகள் தரம் 10 கல்வி கற்கும் சகல மாணவர்களும் இந்தப்பரீட்சையில் தோற்ற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

அரசின் புதிய கல்வி சீர்திருத்தத்தின் ஓர் அங்கமாக தரம் 10 மாணவர்களுக்கு மாகா ண மட்டத்தில் பொது பரீட்சை ஒன்று நபத்தப்பட் டு வருகின்றது. இந்தப்பரீட்சைக்கான வினாத்தாள் கள் அந்தந்த மாகாண கல்வி திணைக்களங் க ளில் தயாரிக்கப்படும் என்றும் விசாலிங்கம் தெரிவித்துள்ளார். (ச-8)

## இரத்த தானம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ தேசியத் தலைவர் வே.பிரபாக ரனின் 51 வது பிறந்த தினத்தை முன்னிட்டு யாழ்.தொழிநுட்பக் கல்லூரி மாணவர்களால் இரத்ததானம் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வு இன்று காலை 11 மணிக்கு தொழில்நுட்பக் கல்லூரி வரவேற்பு மண்ட பத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இரத்ததான நிகழ்வில் விரிவுரை யாளர்கள், உத்தியோகஸ்தர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொள்ளலாம் என மாணவர் மன்றம் அறிவித்துள்ளது. (ச)

## இராணுவ வாகனம் மீது கிரனைட் தாக்குதல்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதான வீதி மருதடியில் இராணுவ வாகனம் மீது நேற்றிரவு கிரனைட் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இனந்தெரியாதோர் மேற்கொண்ட இத் தாக்குதலில் நான்கு இராணுவத்தினர் உட் பட ஐவர் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்த இராணுவத்தினர் பலாலி இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக் கப்பட்டுள்ளனர். காயமடைந்த அல்வாய் கரவெட்டியை சேர்ந்த தங்கவேலாயுதம் தவேந்திரன் (வயது-20) என்பவர் மந்திகை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச் சம்பவத்தினையடுத்து அப்பகுதி எங்கும் பதற்ற நிலை ஏற்பட்டுள்ளது. பெரு மளவான இராணுவத்தினரும் குவிக்கப் பட்டுள்ளனர். (ச-52,4)

# நாடு முழுவதும் 63 ஆயிரம் பேர் மழையினால் இடம் பெயர்வு

(கொழும்பு)

நாட்டில் கடந்த சில நாட்களாக பெய்து வந்த கடும் மழையால் 10 மாவட்ட ங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தம் கார ணமாக 63 ஆயிரத்து 905 குடும்பங்கள் இடம் பெயர்ந்துள்ளதாக அனர்த்த முகா மைத்துவ மையம் அறிவித்துள்ளது.

இடம் பெயர்ந்த மக்களுக்கு தேவையான நிவாரணங்களை உடனடியாக வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மையத்தின் பணிப்பாளர் என்.ரி.ஹெட்டியாராய்சி தெரிவித்துள்ளார்.

இதற்கென சமூக நலன்புரி அமைச்சு 70 லட்சம் ரூபா நிதியை பிரதேச செயலா ளர்களுக்கு பகிர்ந்தளித்துள்ளது.

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, மன்னார் ஆகிய மாவட்டங்களில் 40 ஆயி ரத்துக்குமான மக்கள் வெள்ளத்தால் இடம் பெயர்ந்துள்ளனர்.

இவர்களுக்கு நிவாரணங்களை வழங்க மாவட்ட செயலாளர்கள் 57 மில்லியன் ரூபாவை அரசிடம் கோரியுள்ளனர். இதே வேளை தாழ்நிலங்கள் தொடர்ந்தும் நீரில் மூழ்கிய நிலையிலேயே காணப்படுகின்றது என ஹெட்டியாராய்சி தெரிவித்துள்ளார். (ச-4)

## முல்லைத் தீவில் இருவர் பலி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவில் கடந்த சில நாட்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக இரு இளைஞர்கீள் உயிரிழந்துள்ளனர். கடும் மழையினால் ஏற்பட்ட வெள்ளத்தினால் சிக்குண்ட இவ்விரு இளைஞர்களும் உயிரி ழந்துள்ளனர்.

அதே வேளை நாடு முழுவதும் மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளத்தினால் 12 பேர்உயிரிழந்துள்ளதாகதேசிய முகாமைத்துவ அனர்த்த நிலையம் தெரிவித்துள்ளது.(ச-8)

## மாவீரர் நினைவு...

நினைவுத்தூபிக்கான மலர்மாலையை அணிவித்தனர். உயர் பட்டப்படிப்புக்கள் பீடாதிபதி க.கந்தசாமி, ஆசிரியர் சங்கத் தலைவர் பேராசிரியர் சி.சிவானந்தமூர்த்தி, பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தலைவர் க.துங்கராசா,பல்கலைக்கழக துணை வேந்தர் மோகன தாஸ் ஆகியோர் நினைவுரை களை நிகழ்த்தினர். (ச-4,8)

# பிரபாகரனின் மாவீரர் உரையில் யுத்தத்திற்கான சமிக்ஞை இருக்கலாம்

## முன்னாள் விமானப் படைத் தளபதி

(கொழும்பு)

தமிழீழ தேசியத் தலைவர் மேதகு வேலுப்பிள்ளை பிரபாகரன் அவர்களது மாவீரர் நாள் உரையில் யுத்தத்திற்கான சமிக்ஞையிருக்கலாம் என எதிர்பார்ப்பதாக விமானப்படையின் முன்னாள் தளபதி ஹரிகுணதிலக அச்சம் தெரிவித்துள்ளார்.

புதிய அரசாங்கத்தின் பாதையை வகுக் கும் விடுதலைப்புலிகள் என்ற தலைப்பில் ஏ.எஃப்.பி சர்வதேச செய்தி ஸ்தாபனம் வெளியிட்டுள்ள செய்தியில் ஹரிகுணதிலக இக்கருத்தை தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தாமளித்த வாக்குறுதிகளின் அடிப்படைகளில் கொள்கைகளை உருவாக்கி கொண்டிருந்தாலும் இந்த வார இறுதியில் பிரபாகரன் ஆற்றவுள்ள உரைதான் அனை வரும் எதிர்பார்த்திருப்பதாக கொள்கை வகுப்பாளர்களும் அரசியல் நோக்கர்களும் கருதுகின்றனர். அந்த உரையில்மீண்டும் யுத்தம் உருவாகக் கூடும் என்று தெரிவிக்கப் படலாம் என்றும் அவர்கள் அச்சப்படுகின் றனர்.

பிரபாகரனின் உரையானது எதனையும் விட இப்பொழுது மிகவும் முக்கியமானது. அவரது உரையில் கடுமையான நிலைப் பாடு வெளிப்படக்கூடும்.

யுத்தத்தை நோக் கிய சமிக்ஞை இந்த உரையில் இடம் பெற லாம் என்று தாம் அச் சப்படுவதாக விமானப் படையின் முன்னாள் தளபதி ஹரிகுணதிலக கூறினார். ஜனாதிபதி பொறுப்பேற்ற மகிந்த ராஜபக்ஷ அமைதிப் பேச்சுக்களுக்குவிடுதலைப்புலிகளுக்கு அழைப்பு விடுப்பார் எனவும் அவர் கூறினார். (ச-8)

# ஜனநாயக ரீதியான பேச்சிற்கே ஜே.வி.பி பூரண ஆதரவு தெரிவிக்கும்

சகல தரப்பினரினதும் கருத்துக்களையும் உள்ளடக்கிய ஜனநாயக வழிமுறையிலான பேச்சு வார்த்தையினையே ஜே.வி.பி விரும் புகின்றது.

அவ் ஜனநாயக ரீதியான வழிமுறைக்கு விடுதலைப்புலிகள் வர மறுப்பார்களானால் அவர்கள் ஜனநாயக விரோதமானவர்களாக இருப்பார்கள் என ஜே.வி.பி யின் பாராளு மன்ற உறுப்பினர் சந்திரசேகரன் தெரிவித் துள்ளார். பி.பி.சி தமிழோசைக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தேசியப் பிரச்சினை தீர்க்கப்படுகின்ற போது சமஷ்டியோ, ஈழமோ இருந்தாலும் கூட அப் பேச்சுவார்த்தைக்கு இந்த நாட்டில் சகலதரப்பினரும் உடன்பாடு ஒன்றிற்கு வர வேண்டும். அவ் உடன்பாட்டை பெரும்பான் மையினம் அங்கீகரிக்கின்ற பொழுது அதனை ஜே.வி.பியும் ஆதரிக்கும்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தற்போது ஆரம்பித்துள்ள சமாதானமுயற்சிகளுக்கு எமது பரிபூரணமான ஒத்துழைப்புக் கிடைக் கும்.

இருப்பினும் இவ் சமாதான முயற்சி ஜன நாயக வழியில் நடைபெற வேண்டும். பல தரப்பினரை உள்ளடக்கியதாக அமைய வேண்டும். இதற்கு ஜே.வி.பி தனது இரு கரங் களையும் உயர்த்தி ஆதரவளிக்கும் எனத் தெரிவித்தார். (ச-4,8)

## சமாதானா...

ஜோன் குணரட்ண பதவிப்பிரமாணம் செய்யவுள்ளார். இராஜதந்திரியான இவர் 1989 ஆம் ஆண்டு முதல் 1992 ஆம் ஆண்டு வரை ஈராக்கில் இலங்கை தூதுவராக கட மையாற்றியுள்ளார்.

இதேவேளை அரச சமாதான செயலகத் தில் ஆலோசகராக ஜயந்த தனபால நியமிக் கப்பட்டுள்ளார். (ச-4)

# சமாதானப் பேச்சுக்களை...

தடைப்பட்டுப் போயுள்ள சமாதானப் முயற்சிகளை மீண்டும் புதிதாக முன்னெடுத் துச் செல்வதற்காக தமிழீழ விடுதலைப்புலி களிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ பகிரங்க கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அத்துடன் பாராளுமன்றத்தை பிரதிநிதித் துவப்படுத்தும் அனைத்து அரசியல் கட்சிக ளுக்குமிடையில்பொதுஉடன்படிக்கைஒன்றை ஏற்படுத்தும் பேச்சுக்கள் ஒன்றை ஆரம்பிக்க வருமாறும் ஜனாதிபதி அழைப்பு விடுத்துள் ளார்.

ஜனாதிபதி மகிந்த தனது தேர்தல் விஞ் ஞாபனத்தில் உறுதியளிக்கப்பட்டதின்படி கௌரவமான சமாதானத்தினை காணும் உடனடி முயற்சிகளை ஆரம்பித்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளுடன் பொது உடன்பாடு ஒன்றைக் காணுவதற்கான முயற்சியில் இறங்குவதே இதற்கான சிறந்த முதற்படி என ஜனாதிபதி கருதுகிறார்.

அதன் பின்னர் விடுதலைப்புலிகளின் தலைவர் வே.பிரபாகரனுடன் நேரடிப் பேச்சுக் களை ஆரம்பிப்பார்.

இதனை முன்னெடுக்கும் சமாதான ஏற் பாட்டாளராக இதுவரை செயற்பட்டு வந்த நோர்வேயை அழைப்பதா? இல்லையா? என ஜனாதிபதி மகிந்த தீர்மானிக்கவில்லை .இது தொடர்பாக திடமாக தீர்மானிக்கப்பட்டதும் அனைவருக்கும் தெரிவிக்கப்படும் என அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவித்தார்.

எமது அரசாங்கத்தின் எதிர்கால நிலைப் பாடு என்பது மகிந்தவின் சிந்தனை என்ற கொள்கைத்திட்டத்தின் வரையறைக்குள் தான் அமைந்திருக்கும்.

நாம் அந்த பொது உடன்பாட்டின் அடிப் படையில் தான் செயற் படுவோம். அதற்காக ஒற்றையாட்சி முறை யைக் கைவிட வில்லை.

வெறும் வார்த்தை வரம்புகள் கட்டப்பட்டு நிற்கமாட்டோம் என்றார் அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா.

இதே வேளை அமைச்சரவைப் பேச்சாள ருடன்ஊடகவியலாளர்மாநாட்டில்கலந்துகொண் டிருந்த புதிய ஊடகத்துறை அமைச்சர் அநு ரா பிரியதர்ஷன யாப்பாவும் இக்கருத்தினை வலியுறுத்தி கூறினார். (ச-8,4)












இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 25.11.2005 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.